4 Shades Whiter in 4 Weeks



சாஸ்திரீய முறை கருத்த மேனியை வெண்மையாகவும், அப்பழுக்கற்றதாகவும் மாற்றுகிறது

அதிசயிக்கத் தக்க தங்கள் முகப் பொலிவு, சாஸ்திரீயமாக வெண்மையளிக்கும் "ப்னாரோஸோன்" உதவியினால் அழகிய மேனியைப் பெற்று அதன் விளைவாகத் தங்களுக்குக் கிட்டும் ஓர் பரிசு. இது வருஷக் கணக்கான ஆராய்ச்சியின் பலன். இதில் அமோனுக்ஸினுடன் கூடிய ஓஸோன் என்னும் முக்கிய சத்து இருக்கிறது. இந்த சரக்குகள் சருமத்தினுள் வெகு தூரம் சென்று, கருத்த ரோமத் துவாரங்களை வெண்மையுறச் செய்து, சருமத்திற்குப் போஷாக்களித்து, பருக்களை அகற்றி, இதர சருமக் கோளாறுகளையும் நீக்க உதவுகிறது. "ப்னாரோஸோன்" உபயோகிப்பது மிக சுலபம். முற்றிலும் தீங்கற்றது. ஒரு பாட்டில் வாங்குங்கள். விரைவில் உங்கள் முகப் பொலிவைக் கண்டு நீங்களே அதிசயிப்பீர்கள். முழு சிகிச்சை (ஒரு பாட்டில்) ரு. 4/-

"ப்னாரோஸோன்" தற்போது கான்ஸென்ட்ரேடட் க்ரீமாக ஜாடி ஒன்று ரு. 5/4-க்கு கிடைக்கும்.



எங்கும் கிடைக்கும்.

ப்னோசி லிட்., த. பெ. 875, பம்பாய்.
சென்னை ராஜதானி டிஸ்ட்ரிபூடர்கள் :
லைவ் இந்தியா ஏஜன்ஸீஸ், 117,
அரமனைக்காரத் தெரு, ஜி. டி. சென்னை.

அணங்கின் அமைதியின்மை



சூதக கோளாறுகளை நிவர்த்தித்து ஆரோக்கியத்தை அளிக்கவல்லது

லோத்ரா

கர்ப்பாசய ரோக நிவாரணி

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்

K.L.E-9

தயாரிப்பவர்கள் :

கேஸரி குடீரம் லிமிடெட்.,
மதராஸ்.


தமிழ்நாடு ஏஜென்டுகள் :

ஸீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ்,
மேல கோபுர வீதி :: மதுரை.

Regd. No. M. 4392

உங்களுக்கு ரயில் மூலம் வரும் சாமான்களை எடுத்து வரவோ அல்லது வெளியூர்களுக்கு சாமான்களை அனுப்பவோ நீங்கள் சிரமப்பட வேண்டாம்.

விவரங்களுக்கு எழுதுங்கள்



மதராஸ் & தென் மராட்டா ரயில்வேக்கு லோகல் டெலிவரி கண்ட்ராக்டர்கள்

202-3, மவுண்டு ரோடு (போன் :- 8536) மதராஸ்.

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press, 116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras.



G.P.S.



இ. ஸி. ஸ்கூல்

திருவனந்தபுரம்.


•

உங்கள் வீட்டிலிருந்து கொண்டே உங்கள் ஜோலிகளுக்கு இடையூறு எதுவு மின்றி ஒரே வருடத்தில், எ. பி. ஸி. முதல் தொடங்கி ஆங்கிலத்தில் நாலா வது பார அறிவு பெறலாம். தொடர்ந்து பயின்ன் மூன்றே வருடங்களில் ஸீனியர் கேம்பிரிட்ஜ், மெட்ரிக்குலேஷன் முதலிய பரீட்சைகள் தேறலாம். இடையில் பாடசாலைகளில் கல்வி நிறுத்தியவர் தொடர்ந்து பயிலலாம். பேராசையுடையாரும், அவசியமுள்ள செலவும் பிரயத்தனமும் செய்ய சக்தி யுள்ளாரும் தாங்கள் கடைசியாக கற்ற வகுப்பும் காட்டி விபரங்கட்கு காலணா ஸ்டாம்புடன் மேற்காணும் விலாஸத்தில் எழுதவும்.

கல்கி



KALKI ஜூன் 4, 1944 4 அணா



எந்த நல்ல சந்தர்ப்பத்திற்கும்

சிநேகிதர்களின் கூட்டுறவு காலங்களில் டெனர் சிகரெட்டு உங்களெல்லாருக்கும் ஆனந்தத்தை அளிக்கும். டெனர் சிகரெட்டின் நறுமணத்தை சந்தோஷத்துடன் இக் காலங்களில் நீங்கள் அனுபவிப்பீர்கள். உங்களில் மெல்லிய தொண்டையுடையவர்கள் இதையே விரும்புவார்கள். உத்தரவாதமுள்ள 100% பொறுக்கின வர்ஜீனியா புகையிலைதான் டெனர்ஸ் செய்யப்படுகிறது. சுகம் நிறைந்த இந்த சிகரெட்டை நீங்கள் வாங்கி உங்கள் சிநேகிதர்களுடன் அனுபவித்துப் பாருங்கள்.

tenor

டி லக்ஸ் டெனர் சிகரெட்டு

ஜேம்ஸ் கார்ல்டன் லிட், லண்டன்

is truly a de Luxe Cigarette

JAMES CARLTON LTD, LONDON. EASTERN LICENCEES, POST BOX No. 470, CALCUTTA



நல்ல காரியம்

செய்வதில் சந்தோஷம்

உங்கள் குடும்பத்திற்கு நீங்கள் செய்ய வேண்டிய கடமைகளை — இன்ஷ்யூர் செய்து கொண்டு அவர்கள் ஒருவித பணக் கஷ்டமும் இல்லாமலிருக்கச் செய்வதில் பரம திருப்தி. குடும்பத்திலேயே விலை மதிக்க முடியாத ஒரு அமைதியும் சந்தோஷமும் நிலவும்.

உங்கள் இன்ஷ்யூரன்ஸ், உலகத்திலே எல்லாவித சொத்துபோல் கிடைக்க வேண்டிய சொத்து.

•

யுனைடெட் இந்தியா லைப்

அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

யுனைடெட் இந்தியா லைப் பில்டிங்

எஸ்ப்ளனேட் — மதராஸ்

இந்தியா பூராவும் பிராஞ்சுகளும் ஏஜன்ஸிகளும் உண்டு

ARVIND

அரவிந்த்

வஸ்திரங்கள் கம்பீரமான ஆடைகளுக்கு

இந்தியாவின் அதி பிரபலமான வஸ்திரங்கள்

நூல் புடவை, வேஷ்டி, ஷர்டிங், டுவில், கிரேப், பாப்ளின், நயின்ஸுக், லான், மல், டோரியா, வாயில் முதலிய தினுசுகள் உள்ளன.

நீங்கள் வாங்கும் துணிகளின் மேல் இக் குறியை பார்க்கவும்

அரவிந்த் மில்ஸ் லிமிடெட், அஹ்மதாபாத்

எங்கும் விற்பனையாளர்கள் உள்ளனர்

AV 19



"இனிமேல் நமக்கு ஆகாயத்தில் இடம் கிடையாது. பூமியில் நடந்து போக வேண்டியதுதான்."

சரியான இடம்

ஸோமாஸ்

"அப்பா ஜகதீசா, இங்கே ஏதாவது வீடு காலியாயிருக்கிறதா?" என்று வாஞ்சிநாதன் கேட்டான்.

"இங்கே அமிஞ்சிக்கரையில் வீட்டுக்குக் குறைச்சலில்லை. ஆனால் இங்கே ஒரு சாமான் கிடைத்தால் இன்னொரு சாமான் கிடைப்பதில்லை. ரொம்பக் கஷ்டம்" என்றான் ஜகதீசன்.

"உனக்கு மட்டும் எப்படிச் சாமான் கிடைக்கிறது?"

"அந்த வயிற்றெரிச்சலை ஏன் கேட்கிறாய்? எல்லாவற்றிற்கும் புரசவாக்கம் போய் வாங்கி வருகிறேன். அதற்காகத்தான் சைக்கிள் வைத்துக் கொண்டிருக்கிறேன்!"

"ஆமாம், இங்கே இருப்பவர்கள் எல்லோருமா அப்படிச் செய்கிறார்கள்?"

"ஆமாம்."

வாஞ்சிநாதன் சற்று நேரம் யோசனையில் ஆழ்ந்தான். பிறகு, "ஆமாம், என்னென்ன சாமான் கிடைக்கவில்லை?" என்று கேட்டான்.

"ரேஷன் அரிசியைத் தவிர வேறு ஒன்றும் கிடைக்கவில்லை."

"சர்க்கரை கிடைக்கிறதோ?"

"கிடைக்கிறது. வாரத்துக்கு அரை வீசை!"

"வெல்லம் கிடைக்கிறதோ?"

"கிடையாது."

"காப்பிக் கொட்டை?"

"ஊஹூம்."

"பேஷ்! கோதுமையாவது கிடைக்குமோ?"

"எப்பவாவது கிடைக்கும்!"

"சுக்கு, திப்பிலி, சிற்றரத்தை முதலிய மருந்துச் சரக்குகளும் கிடைக்காதாக்கும்!"

"இங்கே மருந்துக்கடையே கிடையாது."

"ரொம்ப சரி! இங்கே கிணறுகள் இருக்கிறதே. எவனாவது தாம்புக் கயிறு விற்கிறானோ?"

"எவனும் விற்பதில்லை!"

"வாசனைத் தைலம், ஸ்நானத் தைலம், அத்தர், புனுகு, ஜவ்வாது, ஊதுவத்தி...!"

"ஏது அப்பா நீ பெரிய ஆளாக இருக்கிறாய்? சாதாரண சாமான்களே சரியாகக் கிடைப்பதில்லையென்றால் வாசனைச் சாமான்களுக்கு எங்கே போவது? அது சரி, நீ என்ன செய்யப்போகிறாய்?"

"நான்தான் தீர்மானம் செய்து விட்டேனே!"

"வருவதில்லையென்றுதானே?"

"நன்றாய்ச் சொன்னாய்! வருவது என்றுதான் தீர்மானம். பெரிய மளிகைக் கடை வைப்பதற்கு இதைவிட ஒரு நல்ல இடம் கிடைக்குமா என்ன? ஒரு சாமானும் கிடைக்காத இடம் வேண்டுமென்றுதானே சென்னை முழுவதும் சுற்றினேன்?" என்றான் வாஞ்சிநாதன்.

ஜகதீசன் ஆச்சரியத்திலும் ஸ்தம்பித்து விட்டான்!

இந்தியன் பாங்க்

லிமிடெட்.

தலைமை ஆபீஸ்:

"இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்"
வடக்கு பீச் ரோடு :: மதராஸ்.

லோகல் ஆபீஸ்கள்:

எஸ்பிளனேட், திருவல்லிக்கேணி,
மயிலாப்பூர், தியாகராய நகர்,
புரசவாக்கம், மவுண்ட் ரோடு.

தென்னிந்தியாவில் எல்லா முக்கியமான இடங்களிலும் பம்பாயிலும் பிரான்சுகளும் சப் ஆபீஸ்களுமுள்ளன.

அதிகாரம் பெற்ற மூலதனம் ரூ. 1,00,00,000

வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம் ரூ. 60,00,000

செலுத்தப்பட்ட மூலதனம் (31-12-43வரை) ரூ. 28,90,385

ரிஸர்வ் நிதி ... ரூ. 30,50,000

டெபாஸிட்கள் ... ரூ. 8,13,62,549

N. கோபால அய்யர், செக்ரடரி.

பேபி பிராண்ட் அசல் நெய்

●

மணம், குணம், ருசி இவற்றில் ஒப்பற்றது. உணவின் ருசியை பன்மடங்கு அதிகப் படுத்துவது. சுவைக்கும், சுகத்திற்கும் உத்தமமானது. மனோரம்மியமான இந்த வாசனை மிகுந்த பேபி பிராண்ட் நெய்யை உபயோகியுங்கள்.

●

ராஜம் & கோ,
கோயமுத்தூர்.

நாடெங்கும் அழகிற் சிறந்த மாதர்கள் உவந்து உபயோகிப்பது



மைசூர் சந்தன சோப்

அது அவர்களது அழகை நன்கு பாதுகாக்கிறது. இந்த சோப் ஒன்றுதான் தங்களது அழகை பாதுகாக்கவல்லது என்பதை அவர்கள் நன்கு அறிவார்கள்

மைசூர் சந்தன சோப்

யிலும் அந்த நபர் அகப்படவில்லை. அவருக்கு உத்தியோகம் மாற்றலாகி விட்டதால் டில்லிக்குப் போய்விட்டதாகப் பக்கத்து வீட்டுக்காரர்கள் சொன்னார்கள். கோதண்ட ராமய்யர் செலவை லட்சியம் செய்யவில்லை.

பெண்ணைப் பெற்றவர்கள் செலவைப் பார்த்தால் முடியுமா? டில்லியை நோக்கிப் பயணமானார். டில்லிக்குப் போயும் காரியம் ஆனபாடில்லை. காரணம் இவர் தேடிப்போன நபர் டில்லியிலிருந்து பம்பாய்க்குப் போய் விட்டதுதான். உடனே பம்பாய்க்குக் கிளம்பினார். நல்ல வேளையாக, ஆபத்சகாயமய்யர் குறிப்பிட்ட ஆசாமி பம்பாயில் அகப்பட்டார்.

கோதண்டராமய்யர் அவரைக் கண்டு, தான் வந்த விவரங்களைச் சாங்கோபாங்கமாகக் கூறி முடித்தார்.


பிள்ளை வீட்டுக்காரர் அதற்குமேல், "பெண்ணுக்குப் பாடத் தெரியுமா? வயசு என்ன? வரதட்சணை எத்தனை?" முதலிய விவரங்களை யெல்லாம் அறிந்து கொண்டார். பிறகு கோதண்டராமய்யர், "பிள்ளையை நான் பார்க்கலாமோ?" என்று கேட்டார்.

"பிள்ளையா? அவன் சென்னைப் பட்டணத்தி லல்லவா இருக்கிறான்!" என்றார் பிள்ளையைப் பெற்றவர்.

கோதண்டராமய்யர், "எங்கே சென்னைப் பட்டணத்திலா?" என்று கேட்டார் தூக்கிவாரிப் போட்டவராய்.

"ஆமாம்; சென்னைப் பட்டணத்தில் தான்; ஜார்ஜ் டவுனில் பிள்ளையார் கோவில் தெருவில் இருக்கிறான்" என்றார் பிள்ளை வீட்டுக்காரர்.

கோதண்டராமய்யருக்கு ஆச்சரியமாயிருந்தது. "பிள்ளையார் கோவில் தெருவில் இருக்கும் பிள்ளையைத் தேடியா இத்தனை ஊர்கள் அலைந்தோம்? நாம் இருக்கிற தெருவுக்குப் பக்கத்தில் அல்லவா இருக்கிறது பிள்ளையார் கோவில் தெரு? அந்தப் பையன் யாராக இருக்கும்?" என்றெல்லாம் யோசிக்கலானார்.




சென்னைக்கு அவர் வந்து சேர்ந்ததும் மனைவியைக் கூப்பிட்டு "அநாவசியமாய் என்னை ஊரெல்லாம் அலைய வைத்தாயே? கடைசியில் பிள்ளை வெளியூரிலா அகப்பட்டான்? பிள்ளையார் கோவில் தெருவில் ஒரு பையன் இருக்கிறானாம். அவனைக் கண்டு பிடிப்பதற்கு டில்லிக்கும் பம்பாய்க்கும் அலையச் சொன்னாயே!" என்றார்.

"பார்த்தயளா? இப்படி நாலு இடம் போய் அலைஞ்சால்தான் பிள்ளை கிடைப்பான் என்றுதான் நான் முதலிலேயே சொன்னேனே?" என்று பிரமாதமாகப் பெருமை யடித்துக் கொண்டான் கோதண்டராமய்யர் மனைவி.

பிள்ளையார் கோவில் தெருவில் இருந்த பிள்ளை வேறு ஒருவரும் இல்லை. பள்ளிக்கூடத்தில் கோதண்டராமய்யரிடமே வாசித்துக்கொண்டிருந்த சாக்ஷாத் சுந்தரராமன் என்கிற பிள்ளைதான். அடாடா! நமது வகுப்பிலேயே வாசித்துக் கொண்டிருந்த சுந்தரராமனுக்காக எங்கெல்லாம் சுற்றி அலைந்தோம் என்பதை நினைத்துப் பார்க்கும்போது கோதண்டராமய்யருக்கு ஆத்திரமும் வெட்கமுமாக இருந்தது.

இவ்வளவு தூரம் தன்னை அலைக்கழித்த சுந்தரராமனுக்கு அவரால் என்ன தண்டனை கொடுக்க முடியும்? தமது பெண்ணையே அவனுக்கு விவாகம் செய்து வைத்தார்!



தள்ளுவதற்கு ஆள் வேண்டாமா?

மாப்பிள்ளை வேட்டை


சாவி

பள்ளிக்கூடத்தி லிருந்து வந்த கோதண்டராமய்யர் தமது கோட்டைக் கழற்றி ஆணியில் மாட்டினார்.


உள்ளே யிருந்து வெளியே வந்த சமையலறை தேவதை அவரைப் பார்த்து, "இந்த வருஷமும் சீட்டாடி நாளைக் கழித்து விடாதீர்கள். மரகதத்துக்கு எப்படியாவது, எங்கேயாவது நாலு இடம் அலைந்து வரன் பார்த்துக் கொண்டு வாருங்கள். வைகாசி மாதத்துக்குள் அவளுக்குக் கல்யாணம் நடந்தாகணும். உம்......நாளைக்கே புறப்படுங்கோ!" என்று கண்டிப்பான உத்தரவு போட்டாள்.

கோதண்டராமய்யர் பதில் பேசவில்லை. மனைவியின் உத்தரவுப்படி மறுதினமே, டிரங்குப் பெட்டி சகிதம் மாப்பிள்ளை தேடக் கிளம்பி விட்டார். அவருடைய நண்பர் ஆபத்சகாயமய்யர் கும்பகோணத்தில் ஒரு இடம் இருப்பதாக அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தார். எனவே, கோதண்டராமய்யர் தமது நண்பர் சொன்னபடி கும்பகோணம் போய் அவர் குறிப்பிட்ட இடத்தையும் பார்த்தார்.

ஆபத்சகாயமய்யர் கொடுத்த விலாசத்தில் யாருமே இல்லை. அந்த இடத்திலிருந்தவர் திருநெல்வேலிக்குப் போய் விட்டதாகத் தகவல் தெரிந்தது. எனவே, கோதண்டராமய்யர் திருநெல்வேலிக்குப் போனார். திருநெல்வேலி



எங்கள் மானேஜர் மிகவும் நல்லவர்




அவர் காரில் எங்கு சென்றாலும் சரி......




எங்கள் எல்லாரையும்



அழைத்துக்கொண்டு போவார்.



ஏனெனில்



வழியில் கார் மக்கர் பண்ணினால்.....

இந்தியன் மியூசுவல் லைப் அஸோஸியேஷன் லிமிடெட்.,

தலைமை ஆபீஸ் :

10, மவுண்ட் ரோடு, மதராஸ்.

●

1943-ம் வருஷம் நவம்பர் மாதம் 1-ம்தேதி முதல் குஜராத், கத்தியவார் முதலிய இடங்களுக்கு அகமதாபாத் மெஸர்ஸ். ஹிந்துஸ்தான் டிரேடர்ஸ் கம்பெனியாரை எமது பிரதம ஏஜண்டுகளாக நியமித்துள்ளோம் என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

ஏஜண்டுகளும், ஆர்கனைசர்களும் தேவை. தொழில் உத்தரவாதத்திற்கு ஏற்றபடி சம்பளம் கொடுக்கப்படும்.

குஜராத், கத்தியவார் முதலிய பிரதேசங்களுக்கு ஏஜன்ஸி விஷயமாய் எங்களது கீழ்க்கண்ட பிரதம ஏஜண்டுகளுக்கு எழுதவும்.

●

மெஸர்ஸ். ஹிந்துஸ்தான் டிரேடர்ஸ்

இந்தியன் மியூசுவல் லைப் பிரதம ஏஜண்டுகள்

எக்ஸ்சேன்ஜ் பில்டிங்ஸ்

காந்தி ரோடு :: அஹமதாபாத்

கலா க்ஷேத்திரம்

(ஸ்ரீமதி ருக்மணி தேவியின் மேற்பார்வையில்)

சென்னை சர்வகலாசாலையில் சங்கீத சிரோமணி வகுப்பை நடத்த முதல் முதலாக அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனம்.

பிரின்ஸிபல் : சங்கீத கலாநிதி டைகர் K. வரதாச்சாரியார்

இவ்வருஷத்தில் போதிக்கப்படுவன : வாய்ப்பாட்டு, பிடில்

3-7-1944 முதல் வகுப்புகள் ஆரம்பிக்கப்படும்

வழக்கம்போல பரத நாட்டியம், கதக்களி, வாய்ப் பாட்டு, வாத்திய சங்கீதம், நாடகக் கலை, சித்திரக் கலை முதலியவைகளும் போதிக்கப்படும்.

நல்ல சுகாதார இட வசதியும் ஹாஸ்டல் சௌகரியங்களும் பொருந்தியது. மற்றும் ஹைஸ்கூல் படிப்பு பெஸண்டு தியஸாபிகல் பள்ளிக்கூடத்துடன் இணைக்கப் பட்டுள்ளது.

மாணவிகள், மாணவர்கள் வந்து போக பஸ் வசதிகள் உண்டு.

பூரா விவரங்கள் அடங்கிய புத்தகத்திற்கு எட்டணா ஸ்டாம்புடன் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர், **கலா க்ஷேத்திரம்**

அடையாறு :: மதராஸ்.

ஏனெனில் விருந்தும், மருந்தும் மூன்று நாளைக்குத்தான் என்று சொல்வார்கள். ஆனால் தற்கால மாமனார் வீடுகளில், விருந்து மூன்று நாளைக்குக் கூட நீடிக்காது. எல்லாம் மூன்றுவேளைச் சாப்பாட்டோடேயே நின்று விடும். இரண்டாம் நாளே மாப்பிள்ளைக்கு, "ஏண்டா, மாமனார் வீட்டுக்கு வந்தோம்" என்று ஆகி விடும். இரண்டாம் நாள் எப்படியோ பல்லைக் கடித்துக்கொண்டு இருந்துவிட்டு, மூன்றாம் நாள், "சொல்லாமல் செய்வோர் பெரியோர்" என்னும் வழக்கை யொட்டி, சொல்லிக் கொள்ளாமலேயே மாப்பிள்ளை கம்பி நீட்டி விடுவார்.

இந்த மாதிரி, மாமனார் வீட்டுக்குச் சென்ற மாப்பிள்ளையின் கதியாகி விட்டது, இந்த யுத்தத்தின் கதியும். இந்தியாவில் இருந்த எல்லாரும், "யுத்தம் வருமா, வருமா, எப்பொழுது வரும், எப்பொழுது வரும்" என்று ஏங்கிக் கொண்டிருந்த காலம் போய், "இந்தச் சனியன் பிடித்த யுத்தம் எப்பொழுது தொலையும்?" என்று ஆகி விட்டது.

எங்கு சென்றாலும், யாரைக் கண்டாலும், இந்த யுத்தம் எப்பொழுது முடியும் என்று கேட்கிறார்கள். சிலர் "யுத்தம் எப்பொழுது முடியும்?" என்று 'முடியும்' என்பதற்குப் பின்னால் கேள்விக் குறி போட்டு, நம்மை ஜோசியம் சொல்லச் சொல்லுகிறார்கள். இன்னும் சிலர், "யுத்தம் எப்பொழுது முடியும்!" என்று 'முடியும்' என்பதற்குப் பின்னால் ஆச்சரியக் குறி போட்டு, தங்கள் முகத்தில் பரிதாபக் குறி தோன்ற நம்மைக் கேட்கிறார்கள்.

ஆனால் இதே ஜனங்கள் தான் யுத்தம் வருவதற்கு முன்னால் யுத்தம் எப்பொழுது வரும், எப்பொழுது வரும் என்று வெகு ஆவலாக இருந்தார்கள். ஏனெனில் யுத்தத்தினால் தங்களுக்கு அநேக காரியங்கள் ஆகும் என்று அவர்கள் வெகு ஆவலாக எதிர்பார்த்தார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக, தாங்கள் எத்தனையோ வருஷ காலமாகக் கண்ணீர் விட்டே வளர்த்து வரும் சுதந்திரப் பயிர் துளிர்த்துத் தழைத்தோங்கும் என்று எதிர் பார்த்தார்கள்.

"ஐரோப்பிய யுத்தம் ஒன்று மட்டும் ஆரம்பிக்கட்டும், இந்தியர்கள் பாடு வேட்டை தான்! ஆங்கிலேயர்கள் திணறிப் போய் விடுவார்கள். நம் காலில் விழுந்து, நாம் வேண்டாமென்றாலும், கெஞ்சிக் கூத்தாடி, வாங்கிக் கொண்டுதான் ஆகவேண்டும்" என்று சுதந்திரத்தைக் கொடுத்து விட்டுத்தான் மறு காரியம் பார்ப்பார்கள் என்று இந்த ஜனங்கள் நினைத்தார்கள்.


இதற்காக யுத்தம் வரச் சற்றுத் தாமதம் ஆனபோது, "ஏ மானங்கெட்ட யுத்தமே! உனக்கு வெட்கமில்லையா? மானம் இல்லையா? உன் இஷ்டப்பட்டபோது வருகிறது என்கிறாயா? வா, சீக்கிரம்" என்றெல்லாம் சொன்னார்கள். சேம்பர்லின் துரை மூனிக்குக்குக் குடையைப் பிடித்துக் கொண்டு பறந்து சென்றபோது இவர்கள் பயந்து போய்விட்டார்கள். "ஐயோ, வருகிற யுத்தத்தை வேண்டாம் என்று சொல்லி விடுவார் போலிருக்கிறதே" என்று கதறினார்கள்.

ஆனால் இவர்கள் ஆசையைக் கெடுக்க வேண்டாம் என்பதற்காகவோ, என்னவோ அந்த யுத்தம் வந்தது. யுத்தம் வந்ததும் எல்லாரும் அதனை ராஜோபசாரமாக வரவேற்றார்கள். யுத்தத்துக்கு, வந்த களைப்பு தீர்ந்ததும், அது தன் கையில் கொண்டு வந்திருந்த பெட்டியில், "இந்திய சுதந்திரம்" இருக்கிறதா என்று பார்த்தார்கள். ஐயோ, என்ன ஏமாற்றம்! பெட்டியில் சுதந்திரத்தைக் காணோம்! சரி, வரும் வழியில் எங்கேயாவது மறந்து வைத்து விட்டு வந்திருக்கும், நம் ஊருக்கு வரும்பொழுது எடுத்துக்கொண்டு வரும் என்று தங்களைத் தாங்களே சமாதானப் படுத்திக் கொண்டார்கள்.

யுத்தம் வந்து ஒரு வருஷம் ஆயிற்று, இரண்டு வருஷமும் ஆயிற்று. இரண்டாம் வருஷ முடிவில் யுத்தம் நம் ஊருக்குக் கிழக்கேயே வந்து முகாம் போட்டது. ஆனால் அப்பொழுதும் அது சுதந்திரத்தைக் கையுடன் கொண்டு வரவில்லை.

அப்படியானால் வெறும் கையோடு தான் வந்ததா? அதுவும் இல்லை. அப்படி வந்திருந்தால்தான் தேவலையே! அப்படிக்கின்றி நமக்கு வேண்டாத பொருள்கள் என்னென்னவற்றையோ எடுத்துக்கொண்டு வந்தது. இந்தப் பொருள்களைக் கண்டதும், நமக்கு "ஏண்டா இந்த யுத்தம் வந்தது? இந்தச் சனியன் பிடித்த யுத்தம் முடியாதா? எப்பொழுதுதான் முடியும்!" என்று ஆகிவிட்டது.

அப்படிக் கசந்து போகும்படி இந்த யுத்தம் நமக்கென்று கொண்டுவந்த பொருள்கள் என்னவென்று அடுத்த இதழில் பார்ப்போம்.



களும், மச்சினிகளும் மாறி மாறி எழுதுவார்கள்.

இதை யெல்லாம் பார்க்கும்போது உங்களுக்குப் போகத்தான் வேண்டும் என்று தோன்றும். ஆனால் கூடவே ஒரு பயம் உங்களைப் பிடித்து வாட்டும். லீவு பதினைந்து நாட்களுக்கு மேல் கொடுக்க மாட்டார்கள் போலிருக்கிறதே, ஆனால் இந்த மாமனார் வீட்டுக்காரர்கள் செய்யும் ஆர்ப்பாட்டத்தைப் பார்த்தால் இரண்டு மாத காலத்துக்குக் குறைந்து விட மாட்டார்கள் என்று தோன்றுகிறதே, இவர்களிடமிருந்து எப்படி விடுவித்துக் கொண்டு, திரும்பவும் ஆபீஸ் வந்து சேர்கிறது என்று கவலைப் பட்டுக் கொண்டே மாமனார் வீடு போய்ச் சேர்வீர்கள்.

மாமனார் வீட்டுக்குப் போன முதல் நாள் உங்களுக்குத் தேவலோகத்தில் இருப்பதாகவே தோன்றும். அத்தனை உபசாரம் நடக்கும். மாமியாரும், மாமனாரும் உங்களுக்கு மாறி மாறி உபசாரம் செய்வார்கள்.

"என்ன மாப்பிள்ளை! எத்தனை நாள் லீவு வாங்கிக் கொண்டிருக்கிறீர்கள்?" என்று மாமனார் வெகு அக்கரையாக விசாரிப்பார். நீங்கள் "பதினைந்து நாள்" என்று பதில் கூறியதும் அவர் முகம் சுருங்கி விடும். பிறகு ஒருவாறு சமாளித்துக்கொண்டு, "பரவாயில்லை, மாப்பிள்ளை! இன்னும் பதினைந்து நாளுக்கு இப்பொழுதே எழுதிப் போட்டு விடுங்கள்" என்பார். இதைக் கேட்டு, சில அசட்டு மாப்பிள்ளைகள் எழுதிப் போட்டு விட்டு, பிறகு மிகவும் திண்டாடுவார்கள்.

ஏன், பிறரைச் சொல்லப் போவானேன்? நானே ஒரு தடவை அப்படித் தான் எழுதிப் போட்டு விட்டு, பின்னால் மிகத் திண்டாடிப் போய் விட்டேன்.



யுத்தம் எப்பொழுது முடியும்!


நாடோடி

வீரம் என்பது கொலையல்ல
  வெற்றியும் அதனால் நிலையல்ல
நேரம் என்பது நிடசாந்தம்
  தெரிவிப்பது நம் சித்தாந்தம்



எவ்வளவு தெளிவான பாட்டு!—இல்லை, இல்லை, மன்னிக்க வேண்டும். இதைப்பாட்டென்று கூறுவதே தவறு. ஆம், பாட்டென்றால் இவ்வளவு எளிதில் புரியும்படியாகவா இருக்கும்? வாத்தியாரை அடுத்து, அவர் பதம், பதமாகப் பிரித்து, பிறகு பதவுரை, பொழிப்புரை, கருத்துரை முதலிய சடங்குகள் செய்த பிறகும் அரை குறையாக மனதில் படுவதுதான் பாட்டு என்று நாம் பள்ளிக்கூட அனுபவத்திலிருந்து தெரிந்து கொண்டிருக்கிறோம்.

“வீரம் என்பது கொலையல்ல, வெற்றியும் அதனால் நிலையல்ல” என்று மிகத் தெளிவாக யாருக்கும் புரியும்படியாகத்தான் நம் கவி சொல்லியிருக்கிறார்.





இருந்தும் இதை யாரும் ஹிட்லருக்கு மொழிபெயர்த்துக் காட்டாததாலோ, என்னவோ தெரியவில்லை; ஹிட்லர் மகா பயங்கரமான யுத்தம் ஒன்றை ஆரம்பித்து வைத்துவிட்டார்.

இந்த யுத்தம் ஆரம்பித்து இப்பொழுது கிட்டத்தட்ட ஐந்து வருஷங்களாகப் போகிறது. இந்த யுத்த விஷயமாக, நாம் ஐந்து வருஷங்களுக்கு முன்பு கொண்டிருந்த மனப்பான்மைக்கும், இப்பொழுது கொண்டுள்ள மனப்பான்மைக்கும் எவ்வளவோ வித்தியாசம் ஏற்பட்டு விட்டது!

மாமனார் வீட்டுக்குச் செல்லும் மாப்பிள்ளைகளின் அனுபவம் உங்கள் எல்லாருக்கும் தெரிந்திருக்கும். நீங்கள் மாமனார் வீட்டுக்குப் போகாது இருக்கும் வரை எல்லாரும் மாப்பிள்ளை வரமாட்டாரா என்று தவியாய்த் தவித்துப் போவார்கள். “நீங்கள் கட்டாயம் வந்துதான் ஆகவேண்டும். கட்டாயம் ஒரு மாதத்துக்குக் குறையாமல் லீவு வாங்கிக் கொண்டு வரவேண்டும்” என்று கடிதத்துக்கு மேல் கடிதம் வரும். “எங்கள் பேரில் கோபமா, என்ன? எங்கள் வீட்டுக்கு வரவே மாட்டேன் என்கிறீர்களே?” என்று மச்சினன்

மறந்தால்தான் நான் குடித்தனம் செய்ய முடியுமென்று தோன்றுகிறது...... அம்மா!...அந்தப் படம் தத்ரூபம் விசாலம் கூடத்தில் இருந்து கொண்டு என்னைப் பார்ப்பது போலவே இருக்கிறது.....முன்பு விசாலத்துக்கு நான் நாற்பது ரூபாயில் சரிகைக் கரை போட்ட கறுப்புப் புடவை வாங்கிக்கொண்டு வந்தேன். 'உன் உடம்புக்கு ரொம்ப அழகாயிருக்கும்' என்றேன். 'எதற்காக இந்த வீண் செலவெல்லாம்? பதினைந்து ரூபாயில் சாதாரணப் புடவை போதாதா? இந்தப் பணத்தைச் சேர்த்து வைத்தால் வீட்டின் முன்பக்கத்தை இடித்துப் புதுமாதிரியாகக் கட்டலாமே'— என்றாள். அப்பொழுது அவள் பார்த்த பார்வையை அந்தப் போட்டோ ஞாபகப் படுத்துகிறது. இதே மாதிரி அதைப் பார்க்கும் போதெல்லாம் ஒவ்வொரு ஞாபகம் தோன்றி என்னைச் சித்திரவதை செய்கிறது. ஆமாம்;......... அவளைக் கொஞ்சமாவது மறந்தால்தான் என்னால் உயிரோடு இருக்க முடியும். அதனால்தான் அதை எடுத்துப் பெட்டிக்குள் வைத்தேன்" என்று சொல்லி நிறுத்தினார். அவர் கண்களில் நீர் பெருகிற்று. ஸரஸ்வதி விம்மி அழத் தொடங்கினாள்.


ரகுபதி வெளியே போனதும், வெகு நேரங்கழித்து அவளுக்கு அழுகை ஓய்ந்தது. ஸரஸ்வதியின் உள்ளத்தில் மகத்தான சாந்தி குடிகொண்டிருந்தது. "புருஷர்களைப் பற்றி நினைத்தது தவறுதான். நான் எண்ணியதுபோல் ரகுபதி அவ்வளவு கேவலமாக நடந்து கொள்ளவில்லை. விசாலத்தை அவர் மறந்து விடவில்லை. மறக்கவும் முடியாது" என்ற நினைவு அவளுக்கு அமைதியைக் கொடுத்தது.

4

சிறிது நேரத்துக்கெல்லாம் சேஷய்யர் வீடு திரும்பியதும் ஊஞ்சலில் வந்து 'அப்பாடா' என்று உட்கார்ந்தார். "ஸரஸு! கொஞ்சம் ஜலம் கொண்டுவா!" என்றார் சேஷய்யர். வெள்ளி டம்ளரும் கையுமாக வந்த ஸரஸ்வதியம்மாள், "இருங்கள்! கொஞ்சம் சுக்குக் கஷாயம் வைத்தேன். இதைச் சாப்பிடுங்கள் முதலில்! காலமே பிடித்து உங்களுக்கு இருமுகிறதல்லவா?" என்றாள்.

சற்று நேரம் சேஷய்யர் மனைவியை வியப்புடன் பார்த்து விட்டு, "அன்றைக்கு இருமலாயிருந்தபோது பாலில் கொஞ்சம் பனங்கற்கண்டைப் போடு என்று சொன்னேன். மாட்டேன் என்று சொன்னாய். இன்றைக்கு மட்டும் என்ன என் மேல் இத்தனை கரிசனம்?" என்றார்.

ஸரஸ்வதியின் கண்களில் நீர் துளித்தது. அதன் காரணம் புரியாமல் திக்பிரமை பிடித்து உட்கார்ந்திருந்தார் சேஷய்யர்.



நோயாளி:—டாக்டர்! உடம்பு என்னமோ பண்ணுகிறது. என்ன பண்ணுகிறது என்று தெரியவில்லை. ஒரு வித வலி இருக்கிறது. எங்கே என்று தெரியவில்லை.

டாக்டர்:—நான் ஒரு மருந்து எழுதித் தருகிறேன். அது என்ன பண்ணும் என்று தெரியாது. அதை வாங்கிச் சாப்பிடுங்கள். அது எங்கே கிடைக்கும் என்று தெரியாது.

சோலைகளில் இருவரும் தலை நிறையப் பூவுடன் பளபளவென்று மின்னும் குடத்தை இடுப்பில் வைத்துக்கொண்டு கிணற்றடிக்குப் போகும் காட்சியே அற்புதமாகத்தான் இருந்தது. அவர்கள் மணவாழ்க்கையில் பதினைந்து வருஷங்கள் ஓடி விட்டன.

சரஸ்வதிக்குப் புத்திரப் பேறு மட்டும் கிட்டவில்லை. விசாலத்துக்கு ஒரு அருமைப் பெண் பிறந்து நான்கு வயதாகி யிருந்தது. மலேரியா சுரம் கண்டு படுத்த படுக்கையானாள். சிறந்த வைத்தியரை டவுனிலிருந்து அழைத்து வருவதற்கு முன்பாக அவள் செல்வக் குழந்தையைத் தனியே விட்டுக் காலமானாள்.

கிணற்றடியை நோக்கிச் சென்று கொண்டிருந்த சரஸ்வதியம்மாள் உள்ளத்தில் அலை அலையாக விசாலத்தைப் பற்றிய பல எண்ணங்கள் தோன்றின. எதிரேயிருந்த ஒவ்வொரு வஸ்துவும், ஒவ்வொரு மரமும், அந்த இடிந்த சிவன் கோவிலும், குளக்கரையும், ரயிலடியும் அவளுக்கு விசாலத்தைத்தான் நினைவூட்டின. அந்த அரச மரம் அவர்கள் புக்ககம் வந்த புதிதில் நட்டது; இப்பொழுது பிரம்மாண்டமாக வளர்ந்திருக்கிறது. "அம்மா விசாலம்! நாம் இரண்டு பேரும் குடம் குடமாகத் தண்ணீர் கொண்டு வந்து அதன் மேல் ஊற்றினோமே, ஞாபகம் இருக்கிறதா? அது மட்டும் வாளிப்பாக 'கரு கரு' வென்று வளர்ந்திருக்கிறதே! அதன் மீது அழகான பட்சிகள் எல்லாம் ஆனந்தமாக ஆடிப் பாடுகிறதே! நீ மட்டும் இப்படிக் காணாமற் போய் விட்டாயே!" என்று வாய்க்குள் சொல்லிக் கொண்டு கண்ணீர் உகுத்தாள் சரஸ்வதி.

"என்ன அதிசயம்! என்ன அதிசயம்! கேட்டாயா சரஸ்வதி இந்த வயிற்றெரிச்சலை?" என்ற குரலைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள் சரஸ்வதி. பாகீரதி அம்மாள் கன்னத்தில் கை வைத்து, முகத்தில் திகைப்பும் கோபமும் பொங்க அவளருகில் நின்று கொண்டிருந்தாள். "என்ன விசேஷம்? என்ன அதிசயம்?" என்றாள் சரஸ்வதி.

"ரகுபதி மனசு இவ்வளவு கருங்கல்லாகவா இருக்கும்? விசாலம் செத்து மூன்று மாசம்கூட ஆகவில்லை. அவன் இரண்டாம் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறானாமே?"

சரஸ்வதியின் தலையில் பேரிடி விழுந்தது போலிருந்தது.

"இருக்காது, வெறும் கட்டுக் கதை! அதையெல்லாம் நம்பாதேயுங்கள்!" என்றாள் சரஸ்வதி சமாளித்துக் கொண்டு.

"என்ன இருக்காது? முகூர்த்தம் கூட வைத்தாகி விட்டது. வருகிற மாசம் 17-ம் தேதி கும்பகோணத்தில் முகூர்த்தம் நடக்கப் போகிறதாம் ...... உனக்கு நிஜமாகவே இது தெரியாதா? உன் அகத்துக்காரர் உன்னிடம் இதைச் சொல்லவேயில்லையா?"

சரஸ்வதி குடத்தில் தண்ணீரை நிரப்பிக் கொண்டு வீட்டை நோக்கி நடந்தாள். உலகம் அவளைச் சுற்றிச் சுழல்வதுபோல் இருந்தது.

2

வீட்டுக்குள் அவள் சென்றபோது அவள் கணவன் சேஷய்யர் ரேழியில் உட்கார்ந்து நூல் நூற்றுக் கொண்டிருந்தார். "இந்தாருங்கோ! உங்களை ஒரு விஷயம் கேட்கவேண்டும்" என்றாள் சரஸ்வதி. சேஷய்யரும் சரஸ்வதியைப் பின் தொடர்ந்து உள்ளே சென்றார்.

"இது உங்களுக்கு நன்றா யிருக்கிறதா? நீங்கள் அவருக்கு அருமை சிநேகிதராச்சே. இந்தக் காரியம் அக்கிரமம், அநியாயம் என்று ஏன் எடுத்துச் சொல்லக் கூடாது?" என்று சரஸ்வதி ஆத்திரத்துடன் கேட்டாள்.

"எந்தக் காரியம்? எது அக்கிரமம்?"

"விசாலம் போய் மூன்று மாசம் கூட ஆகவில்லை. அதற்குள் அவர் இரண்டாம் கல்யாணம் செய்துகொள்ளப் போகிறாராமே. அவள் ஸ்தானத்திற்கு இன்னொருத்தி வருவதா? அவள் இருந்த வீட்டில் வேறொருவள் வந்து வாழ்வதா?"

"இதெல்லாம் அவன் சொந்த விஷயம். நான் அதில் தலையிடலாமா?"

"ஒரு நாளும் உங்கள் சொல்லை அவர் தட்டமாட்டார். நீங்கள் இந்தக் கல்யாணத்தை நிறுத்தத்தான் வேண்டும்."

"இரண்டாம் கல்யாணம் செய்து கொள்வதில் என்ன தப்பு என்கிறாய்?" என்றார் சேஷய்யர் சிரித்துக்கொண்டே.

அந்தச் சிரிப்பு சரஸ்வதியை வேல் கொண்டு தாக்குவது போலிருந்தது.

"தப்பு என்ன என்று கேட்கிறீர்கள்? புருஷர்கள் அப்படித்தான் கேட்பீர்கள். உங்களுக்கு மனைவிகள் அடிமைகளாக இருக்க வேண்டும். நாயாக உழைத்து

நீங்கள் சொல்வதற்கெல்லாம் ஆட வேண்டும். அப்படியெல்லாம் உழைத்து என்ன பலன்? உங்களுக்கு நன்றி விசுவாசம் உண்டா? நாங்கள் கண்ணை மூடினால் போதும், எங்களை அடியோடு மறந்து போய்விடுவீர்கள். ரகுபதிக்குக் கொஞ்சமாவது விசாலத்தின் ஞாபகம் இருந்தால், இந்தக் கல்யாணம் செய்து கொள்ள மனசு இடம் கொடுக்குமா?"

மனைவியின் ஆத்திரத்தைப் பார்த்துச் சேஷய்யர் பதில் சொல்லாமல் புன்னகை பூத்தார்.

ஸரஸ்வதிக்கு வேலையே ஓடவில்லை. நெருப்பை மிதித்தவள்போல் அவள் தவியாய்த் தவித்தாள். வழக்கம்போல் கணவனுடன் அவள் பேசவில்லை.

"ஸரஸா! பாலில் கொஞ்சம் பனங்கற்கண்டைப் போட்டுவை. இருமுகிறது எனக்கு" என்றார் சேஷய்யர்.

"பனங்கற்கண்டு வேறு, மண்ணாங்கட்டி வேறு! எதைச் செய்துதான் என்ன பிரயோசனம்? என்று எண்ணிக் கொண்டவளாய், "எனக்குத் தலையை வலிக்கிறது. நீங்களே போட்டுக் கொள்ளுங்கள்!" என்று சொல்லி விட்டுப் படுத்துக் கொண்டாள் ஸரஸ்வதி. அவளுக்குத் தூக்கமே வரவில்லை.

3

அன்று மாலை இரட்டை மாட்டு வண்டி ஒன்று ரகுபதியின் வீட்டு வாசலில் வந்து நின்றது. ரகுபதி தாம் புதிதாகக் கல்யாணம் செய்துகொண்ட மனைவியுடன் வந்து இறங்கினார். பெரிய பெண்தான். பார்ப்பதற்கு உயரமாக ஒல்லியாக இருந்தாள். கையில் குழந்தை சாரதாவைப் பிடித்துக் கொண்டு உள்ளே போனாள்.

ஸரஸ்வதிக்கு இதைப் பார்த்ததும் தலையைச் சுற்றிற்று. உள்ளே போய் விசிப் பலகையில் விழுந்து விம்மி விம்மி அழுதாள். நல்ல வேளையாக வீட்டில் சேஷய்யர் இல்லை.

இரண்டாவது மனைவி வந்து சேர்ந்ததிலிருந்து ரகுபதியின் வாழ்க்கையில் ஸரஸ்வதி எதிர்பார்த்தபடியே ஆச்சரியமான மாறுதல் உண்டாயிற்று. அவர் முன்போல் சேஷய்யர் வீட்டுக்கு வருவதில்லை. வீட்டுக்குள்ளேயே வெகு நேரம் அடைந்து கிடப்பார். பிறகு தன்னந் தனியாக வெளியில் போவார். யாரிடமும் அவர் அதிகமாகப் பேசுவதில்லை.

ஒரு நாள் ஒரு எதிர்பாராத செய்தி திடுக்கிட வைக்கும் செய்தி, ஸரஸ்வதியின் காதுக்கு எட்டிற்று. ரகுபதியின் வீட்டுக் கூடத்தில் மாட்டியிருந்த விசாலத்தின் பெரிய போட்டோப் படத்தை எடுத்து எங்கேயோ எறிந்து விட்டார் என்ற செய்தி தான் அது. அதைக் கேட்டதும் ஸரஸ்வதிக்கு உடல் முழுதும் நடுங்கிற்று. துக்கம் மார்பைப் பிளந்து விடும்போலிருந்தது. கண்ணுக்குக் கண்ணான மனைவியின் படத்தை, பதினைந்து வருஷ காலமாகச் சுகதுக்கங்களைப் பகிர்ந்து வந்த வாழ்க்கைத் துணைவியின் படத்தை இப்படித் தூர எறிய யாருக்கு மனம் வரும்?

மறுநாள் காலை பத்து மணி இருக்கும். ரகுபதி குழந்தை சாரதாவுடன் வெகு நாள் கழித்து சேஷய்யர் வீட்டுக்கு அன்று வந்தார். சேஷய்யர் அப்பொழுது வீட்டில் இல்லை. அவர் வீட்டில் இல்லை என்பதைக் காணவே, ரகுபதி வந்த வழியே திரும்பினார். ஸரஸ்வதி ஆவேசம் வந்தவள்போல், "இருங்கள்! ஒரு வார்த்தை!" என்றாள் ரகுபதியைப் பார்த்து. பதினைந்து வருஷ காலமாகத் தம்முடன் பேசாத ஸரஸ்வதி இப்படிக் கூப்பிட்டதும் திடுக்கிட்டுத் திரும்பினார் ரகுபதி.

"நான் வேறு ஒன்றும் உங்களைக் கேட்கவில்லை. விசாலத்தின் படத்தை எடுத்து எறிந்து விட்டீர்களாமே, அந்தப் படம் உங்களை என்ன செய்தது, ஏன் அப்படிச் செய்தீர்கள்?" என்றாள் ஸரஸ்வதி கடுங் கோபத்துடன்.

இதைக் கேட்டதும் ரகுபதி நின்றார். அவர் முகத்தில் திடீரென்று சோகம் குடிகொண்டது. சட்டென்று குழந்தையை வீட்டுக்குப் போகச் சொல்லிவிட்டு ஸரஸ்வதியின் அருகில் வந்தார். இப்பொழுது அவருக் கருகில் ஸரஸ்வதியைத் தவிர வேறு யாரும் இல்லை. எங்கும் நிசப்தம் குடிகொண்டிருந்தது. அவர் உதடுகள் துடித்தன. நாவு தழுதழுத்தது.

"அம்மா! உன்னைத் தவிர வேறு யாரிடம் என் துக்கத்தைச் சொல்லித் தீர்த்துக்கொள்ளப் போகிறேன்? குழந்தை சாரதாவுக்கு ஒரு தாயார் இருக்க வேண்டும் என்பதை உத்தேசித்து இந்தக் கல்யாணம் செய்து கொண்டேன். எப்பொழுதும் விசாலத்தின் நினைவு வந்து என்னைப் பைத்தியமாக அடித்துக் கொண்டிருக்கிறது. அவளைக் கொஞ்சமாவது



மறக்காத நெஞ்சம்

வஸந்தன்

ஸரஸ்வதி அம்மாள் குடத்தை எடுத்துக் கொண்டு கிணற்றடிக்குப் போனாள். தாங்க முடியாத ஒரு வேதனை அவளைப் பிடுங்கித் தின்று கொண்டிருந்தது. விசாலத்தின் நினைவு அவளுக்கு வரவே அவள் கண்களில் நீர் பொங்கிற்று. எங்கேயாவது சற்று நேரம் உட்கார்ந்து ஒரு குரல் கதறி அழலாமா என்று அவள் நினைத்தாள்.

“விசாலம், விசாலம்! இப்படியா உனக்கு அந்தக் காய்ச்சல் வரவேண்டும்? ஊரில் எல்லோருக்கும் காய்ச்சல் வந்து பிழைத்து எழுந்திருக்க வில்லையா? உன் உயிரை மட்டும் அந்தப் பாவி யமன் கொண்டு போவானேன்?” என்று நினைத்து ஸரஸ்வதி அம்மாள் கண்ணீர் விட்டாள்.

ஸரஸ்வதி அம்மாளும் விசாலமும் ரொம்ப சிநேகிதிகள். ஸரஸ்வதியின் புருஷன் சேஷய்யரும், விசாலத்தின் புருஷன் கணபதியும் பால்ய நண்பர்கள்; இணைபிரியா சிநேகிதர்கள். இவ்விருவர் நட்பைப் பார்த்து அந்த ஊரில் ஆச்சரியப்படாதவர்கள் கிடையாது.

ஸரஸ்வதியும் விசாலமும் சேர்ந்தாற் போல் கோவிலுக்குப் போவார்கள்; குளத்தங் கரைக்குப் போவார்கள். சாயங்கால



அரைக்கீரை விதைத் தைலம்

அரைக்கீரை விதையுடன் 72-வித சரக்குகளும் அநேக பச்சிலைகளும் சேர்த்து தயாரிக்கப்பட்டது. இத்தைலத்தை வாரம் இரு முறை தேய்த்து ஸ்நானம் செய்து வர சிரசைப் பற்றிய சகல வியாதிகளைப் போக்குவதுடன் கண் எரிச்சல், கண் மறைப்பு முதலிய கண் சம்பந்தமான வியாதிகளையும், காது குத்தல், காதில் சீழ் வருதல் முதலிய வியாதிகளையும் கண்டிக்கக் கூடியது.

●

கோகுல் சோப்

(மிருகக் கொழுப்பற்றது)

ஆடைகளை தூய வெண்மையாக்குவதில் நிகரற்றது.

பெரிய பார்களாகவும் சிறு கட்டிகளாகவும் குறைந்த விலையில் கிடைக்கும்.

●

தயாரிப்பவர்கள் :

டி.எஸ்.ஆர். அண்டு கோ., கும்பகோணம்.

மதராஸ் ஸோல் ஏஜெண்டுகள் :

மெஸர்ஸ். புஷ்பவனம் ஸ்டோர்ஸ்

பைக்ராப்ட்ஸ் ரோடு — திருவல்லிக்கேணி


●

பாலக்காட்டுக்கு ஸோல் ஏஜெண்டுகளும்
கோயமுத்தூருக்கு ஸ்டாக்கிஸ்டுகளும்

தி சதர்ன் இந்தியா ஏஜன்ஸீஸ்


அவநாசி ரோடு — கோயமுத்தூர்

பல சரக்கு



காந்திஜி எந்தக் காரியத்தைச் செய்தாலும் காலம் தவருது ஒழுங்காகச் செய்து முடிக்க வல்லவர் என்பது பிரசித்தம். ஒரு சமயம் காந்திஜி மோதிலால் நேருவின் தகனக் கிரியைக்குச் சென்று தம் இருப்பிடத்துக்குக் காரில் திரும்பிக் கொண்டிருந்தார். அப்படி வருவதற்குள் விடுதும் நேரத்தில் தூங்க வேண்டும் என்று நினைத்தார். அதன்படியே தூங்கவும் ஆரம்பித்தார். இடைவழியில் கார் ஒரு மரத்தின் மீது மோதியது. காந்திஜி வெளியே தூக்கி எறியப்பட்டார். உடனே சுற்றி யிருந்தவர்கள். "காந்திஜிக்கு என்ன நேர்ந்ததோ?" என்று கவலையுடன் ஓடிப்போய் அவரைக் குனிந்து பார்த்தார்கள். காந்திஜி என்ன செய்து கொண்டிருந்தார் தெரியுமோ! நேரத்தை வீணுக்கவில்லை. அந்த இடத்திலும் நிம்மதியாகத் தூங்கிக்கொண்டு தான் இருந்தார்.

★




இங்கிலாந்திலுள்ள பண்ணைகளில் ஆயிரக்கணக்கான இதாலிய யுத்தக் கைதிகள் வேலை செய்து வருகிறுர்களாம். இதாலியக் கைதி ஒருவர் பிரிட்டிஷ் அதிகாரி ஒருவரைப் பார்த்து, "ஐயா! நாங்கள் பிரிட்டிஷ் யுத்த சேமிப்புப் பத்திரங்களை வாங்கலாமல்லவா?" என்று கேட்டாராம். அந்த அதிகாரி தூக்கிவாரிப் போட்டவராய், "என்ன சொன்னீர்கள்? யுத்த சேமிப்புப் பத்திரங்களையா? நீங்கள் பத்திரங்கள் வாங்குகிற பணத்தைக் கொண்டு குண்டுகள் தயாரித்து உங்கள் தேசத்தின் மீதல்லவா போடப் போகிறுர்கள்?" என்றுராம். "அது எங்களுக்குத் தெரியும். ஆனுல் எங்கள் பணமாவது பத்திரமாயிருக்கும் அல்லவா?" என்றுராம் அந்தக் கைதி!

★



ஒரு சமயம் பிரபல அறிஞரான ஜார்ஜ் பெர்னுர்ட் ஷா கொட்டும் மழையில் அகப்பட்டுக்கொண்டார். உடனே பக்கத்தில் இருந்த கட்டிடம் ஒன்றுக்குச் சென்று கதவைத் தட்டினர். உள்ளே இருந்தவன் கதவைத் திறக்க மறுத்ததும் ஷா, "நான்தான் பெர்னுர்ட் ஷா. கதவைத் திறவுங்கள்" என்றுர். இதைக் கேட்டதும் அவன் கல, கல வென்று சிரித்துவிட்டு, "உள்ளே இருபது பேர் தாங்கள்தான் பெர்னுர்ட் ஷா என்று சொல்லிக் கொண்டிருக்கிறுர்கள். இருபத்து ஒன்றுவது பேராக நீரும் போய்ச் சேரும்" என்று சொல்லிக் கதவைத் திறந்தான். உள்ளே சென்ற பிறகு தான் அந்தக் கட்டிடம் பயித்தியக்கார ஆஸ்பத்திரி என்று தெரிந்தது!

★



பிரஞ்சு அரசன் லூயி ஒரு சமயம் தன் பண்ணையில் நிறைய உருளைக் கிழங்கு பயிர் செய்து, அதைத் திருடுகிறவர்களுக்குக் கடுமையான தண்டனை விதிக்கப்படும் என்று உத்தரவு போட்டான். அரசன் உத்தரவு போட்டானேயொழிய ஜனங்கள் அவன் பண்ணையிலிருந்து நிறைய உருளைக் கிழங்குகள் திருடித் தங்கள் தங்கள் தோட்டத்தில் பயிர் செய்ய ஆரம்பித்தார்கள். ஆனுல் இதற்காக அரசன் ஜனங்களைத் தண்டிக்கவில்லை. ஏன் என்று அரசனின் நண்பர் ஒருவர் கேட்டதற்கு, "நான் இலவசமாக உருளைக்கிழங்கு கொடுத்த போது அவர்கள் வாங்க மறுத்தார்கள். ஜனங்கள் நிறையத் திருடிப் பயிர் செய்ய வேண்டுமென்றே அப்படி உத்தரவு போட்டேன்" என்றுன்.

எடுத்துக் கொண்டு விட்டால் என்ன? இதை வைத்துக்கொண்டு நாம் எவ்வளவோ வித்தைகள் செய்யலாமே" என்றான் கண்ணன்.

"ஆமாம், ஆமாம்; சத்தம் போடாதே! மெதுவாகப் போ அவன் விழித்துக் கொள்வதற்கு முன், அவற்றை எடுத்துக் கொண்டு வந்து விடலாம்" என்றாள் கமலா.



சிறுவர்கள் இருவரும் அடிமேல் அடிவைத்து கிழவனை நெருங்கினார்கள். கிழவன் குறட்டை விட்டுக் கொண்டு அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான். கண்ணன் ஜமக்காளத்தை எடுத்துக் கொண்டான். கமலா ஊதல் வாத்தியத்தை எடுத்துக் கொண்டாள். இருவரும் திரும்பி வெகுதூரம் வந்து விட்டார்கள்.

கண்ணன் ஜமக்காளத்தைக் கீழே வைத்தான். கமலா வாத்தியத்தை ஊதினாள். "ஏ! ஜமக்காளம் எங்கே வாத்தியத்திற்குத் தகுந்தபடி ஒரு டான்ஸ் செய்!" என்றான் கண்ணன். கீழே போட்ட ஜமக்காளம் வேடிக்கையாக டான்ஸ் செய்தது. கண்ணனுக்கும் கமலாவுக்கும் சந்தோஷம் தாங்க முடியவில்லை. ஜமக்காளத்தில் கமலாவும் கண்ணனும் ஏறிக் கொண்டார்கள். கமலா ஊதல் வாத்தியத்தை வாசித்தாள். கண்ணன், "எங்கே, ஆகாயத்தில் பறந்து செல், பார்க்கலாம்!" என்று சொன்னான். என்ன ஆச்சரியம்! உடனே ஜமக்காளம் கண்ணனையும் கமலாவையும் தூக்கிக் கொண்டு ஆகாயத்தில் பறந்தது.

ஜமக்காளத்துடன் உயரத்தில் பறந்த கமலாவும் கண்ணனும் கொஞ்சங்கூடப் பயப்படாமல் ஆகாயத்திலிருந்து பட்டணம் முழுவதையும் பார்த்து ஆனந்தித்தார்கள். அப்பொழுது இருட்டும் சமயம். ஜமக்காளம் உயரப் பறப்பதை நிறுத்திக் கீழே வெகு வேகமாக இறங்க ஆரம்பித்தது. அரை நொடியில் வெகு தூரம் கீழே இறங்கி விட்டது. கடைசியில் ஒரு கூரை வீட்டின் முற்றத்தின் வழியாக தொப்பென்று இறங்கிற்று. கண்ணனையும் கமலாவையும் மூட்டையைப் போல் கட்டி ஒரு மனிதன் எதிரில் கொண்டு போய் நிறுத்திற்று.

அப்பொழுது அந்த மனிதனைப் பார்த்த கண்ணனுக்கும் கமலாவுக்கும் தூக்கி வாரிப்போட்டது. ஏனெனில் அவன் தான் முதலில் ஜமக்காளத்தை வைத்திருந்த கிழவன். கண்ணனுக்கும் கமலாவுக்கும் பயம் உண்டாயிற்று. தாங்கள் அவனுக்குத் தெரியாமல் ஜமக்காளத்தையும், ஊதல் வாத்தியத்தையும் தூக்கிக் கொண்டு வந்ததற்கு எங்கே கிழவன் கோபிப்பானோ என்று அவர்கள் பயந்தார்கள்.

ஆனால் கிழவன் ஒன்றும் சொல்லவில்லை. சிரித்துக் கொண்டே, "குழந்தைகளே! இந்த ஜமக்காளம் என் தகப்பனார் எனக்குக் கொடுத்தது. இது எங்கே இருந்தாலும் அஸ்தமிக்கும் சமயத்தில் என்னை வந்து சேர்ந்து விடும். உங்களுக்குப் பாடம் கற்பிக்கவே நீங்கள் ஜமக்காளத்தை எனக்குத் தெரியாமல் எடுத்துக் கொண்டு போகும்பொழுது பேசாமலிருந்தேன்" என்றான் கிழவன்.

"இனிமேல் உங்களைக் கேட்காமல் ஜமக்காளத்தையும் ஊதலையும் எடுத்துக்கொண்டு போக மாட்டோம். கேட்டுக் கொண்டுதான் எடுத்துக் கொண்டு போவோம். நாளைக்குச் சிறிது நேரம் அவற்றைக் கொடுக்கிறீர்களா?" என்றார்கள் குழந்தைகள். கிழவன் அவர்கள் சாமர்த்தியத்தைக் கண்டு வியந்தான்.



பறக்கும் ஜமக்காளம்



கண்ணனும் அவன் தங்கை கமலாவும் வாசற் பக்கம் வந்தார்கள். அச்சமயத்தில் யாரோ வாத்தியம் வாசிப்பதுபோல் சத்தம் கேட்டது. உடனே கண்ணனும் கமலாவும் எட்டிப் பார்த்தார்கள். தெருக் கோடியில் ஒரு சிறிய கூட்டம் கூடியிருந்தது. கூட்டத்திற்கு நடுவில் கிழவன் ஒருவன் உட்கார்ந்திருந்தான். அவன் வாயில் ஒரு சிறிய வாத்தியத்தை வைத்து ஊதிக் கொண்டிருந்தான். அவன் எதிரில் ஒரு சிறிய ஜமக்காளம் விரிக்கப்பட்டிருந்தது. அக் கிழவன் சிறிது நேரம் அந்த வாத்தியத்தை ஊதிவிட்டு, "எங்கே, பார்க்கலாம்; சுற்றிச் சுற்றி வா!" என்று ஜமக்காளத்தைத் தொட்டுச் சொல்ல, அந்த ஜமக்காளம் அசைவதுபோல் இருந்தது. பிறகு அது இருந்த இடத்திலேயே சற்று மெதுவாகச் சுற்றிற்று. வேடிக்கை பார்க்க வந்த ஜனங்கள், "இதென்ன ஆச்சரியம்!" என்று சந்தோஷத்தினால் கைகொட்டினார்கள்.

"ஜனங்கள் கொடுக்கும் காசை வாங்கிக் கொண்டு வா" என்று கிழவன் ஜமக்காளத்தைப் பார்த்துச் சொன்னான். உடனே ஜமக்காளம் சற்று உயரப் பறந்து ஜனங்களை நெருங்கிச் சுற்றி வந்தது. ஜனங்கள் ஜமக்காளத்தில் நிறையக் காசு போட்டார்கள்.

கூட்டம் கலைந்தது. கிழவன் ஊதல் வாத்தியத்தையும் ஜமக்காளத்தையும் கையில் எடுத்துக்கொண்டு கிளம்பினான். கண்ணனும் கமலாவும் அவனைப் பின் தொடர்ந்தார்கள். ஜமக்காளத்தைப் பார்த்த பிறகு, அவர்கள் இருவருக்கும் அதை விட்டு விட்டுப் போக மனம் வரவில்லை.

கிழவன் வெகு தூரம் நடந்து வந்த களைப்பினால் ஒரு மரத்தடியில் சற்றுக் களைப்பாற உட்கார்ந்தான். அவன் எதிரில் ஜமக்காளத்தையும் அதன் பக்கத்தில் ஊதலையும் வைத்தான். மரத்தடியில் சாய்ந்தான். களைப்பு மேலிடவே அவன் சற்றுக் கண்ணயர்ந்து தூங்க ஆரம்பித்தான்.

"கிழவனுக்குத் தெரியாமல் நாம் இந்த ஜமக்காளத்தையும் ஊதலையும்



காலக்ஷேபம்

சுமார் விஷயம்

வக்கீல் (தமது தரப்பு சாக்ஷியிடம்):— கோர்ட்டில் ஏதாவது கேள்வி கேட்டால் சரியாகப் பதில் சொல்லத் தெரிய வேண்டும். உதாரணமாக, நீர் வாதியின் வீட்டுக்கு எத்தனை மணிக்குப் போனீர், நீர் இருந்த இடத்திற்கும் வாதி உட்கார்ந்திருந்த இடத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும், என்றெல்லாம் கேட்டால், "சுமார் பத்து மணி, சுமார் இருபது கஜதூரம்" என்பது போல் உத்தேசமாகச் சொல்ல வேண்டும். என்ன தெரிகிறதா?

சாக்ஷி (தலையை ஆட்டி):— உம், தெரியும்.

வக்கீல்:— இப்போது நான் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்லும் பார்க்கலாம்-உமது பெயர் என்ன?

சாக்ஷி:— சுமார் சுப்பராயப் பிள்ளை.

—பி. வேதவல்லி.

●

யோக்கியன்!

நீதிபதி:— சிற்றுண்டிக்காகவா இரவில் பூட்டை உடைத்து ஹோட்டலில் புகுந்தாய்?

குற்றவாளி:— ஆமாம்; ரொம்பவும் பசியாக இருந்தது.

நீதிபதி:— அப்படியானல் இரும்புப் பெட்டியை ஏன் திறந்தாய்?

குற்றவாளி:— சிற்றுண்டியின் கிரயத்தை அதில் போடுவதற்கு!

—டி. கே. சுப்ரமணியன்.

●

உண்மை நடிப்பு!

தாயார்:— அடியே கமலா! என்னடி இப்படிக் கூச்சல் போடுகிறாய்? ராஜுவைப் பார்! எப்படிச் சமர்த்தாய்ச் சத்தம் போடாமல் இருக்கிறானென்று!

சிறுமி கமலா:— இல்லை அம்மா! நாங்கள் அப்பா அம்மா விளையாட்டு ஆடுகிறோம். நான்தான் அம்மாவாம். ராஜுதான் சாயங்காலம் ஆபீஸிலிருந்து லேட்டாக வீட்டுக்கு வரும் அப்பாவாம். அந்த விளையாட்டுத்தான் விளையாடுகிறோம் அம்மா.—என். வி. துரைசாமி.

நாணயம்!

கணக்கு வாத்தியார்:— கணக்கில் அடுத்த பாடம் "இந்திய நாணயங்கள்—இனமாற்றல்" என்பது பற்றி. இனமாற்றல் என்றால் என்ன என்று யாருக்காவது தெரியுமா?

ஒரு பையன்:— தெரியும் சார். பொன், வெள்ளி முதலிய நாணயங்களை வாங்கிக்கொண்டு நயம், காகிதம் முதலான வேறு இனமாகத் திருப்பிக் கொடுப்பது சார்! —பாக்கியம்.

●

நிலைதான்!

சாமான் வாங்குபவன்:— ஐயா, இந்த சாமான் என்ன விலை?

கடை முதலாளி:— யுத்த காலம் தானே? எல்லாம் ஒன்றுக்கு நாலாக விற்கிறது.

வாங்குபவன்:— அப்படியானால் எல்லாம் விலை குறைந்து விட்டதோ?

—பி. எஸ். நாராயணன் போத்.

●

சொல்லக் கூடாது

பாட்டி:— ஏண்டா! தோசைக்குத் தொட்டுக்கொள்ளத் தொகையல் போடட்டுமா?



பையன்:— ஐயோ! சர்க்கரை போடுன்னு எவ்வளவு தரம் சொல்லணும்.

பாட்டி:— இழவே! வீட்டில் ஐயோன்னு சொல்லாதேன்னு எவ்வளவு தரம் சொல்லணும்?

—கு. வெ. சுப்பிரமணியன்.

கோமளத்தின் கல்யாணம்!

ரங்கசாமி அய்யங்காரும் பார்த்தசாரதி அய்யங்காரும் உடன் பிறந்த சகோதரர்கள் என்று சொன்னால் ஒருவரும் நம்பமாட்டார்கள், அவர்களுக்குள் அவ்வளவு பொருத்தம். ரங்கசாமி அய்யங்கார் எதைச் செய்யாதே என்று சொல்கிறாரோ அதைப் பார்த்தசாரதி அய்யங்கார் கட்டாயமாகச் செய்து விட்டுத்தான் மறுகாரியம் பார்ப்பார். ரங்கசாமி அய்யங்காரும் இதே ரீதிதான். அவர்கள் தாயார் சுந்தரவல்லியம்மாளுக்கு இவர்களது சண்டையைத் தீர்த்து வைப்பதே தினசரி வேலை.

இப்படி யிருக்கையில் ரங்கசாமி அய்யங்காரின் பெண் கோமளத்திற்குக் கல்யாணம் நிச்சயமாயிற்று. முகூர்த்தத்திற்கு நான்கு தினங்கள்தான் இருந்தன. கல்யாண விஷயத்தில் சகோதரர்களுக்குள் சச்சரவு ஏற்பட்டது. பாலகிருஷ்ண ஜுவல்லரியில் போய் வெள்ளிப் பாத்திரங்கள் எடுக்கலாம் என்று ரங்கசாமி அய்யங்கார் சொன்னால் உடனேயே பார்த்தசாரதி "போதும், போதும்! உனக்கென்று ஒன்று அகப்படுகிறதே! அவன் சுத்த மோசக்காரன். அவன் கடை வாசல் பக்கம்கூடப் போகக்கூடாது" என்று குறுக்கிடுவார். நமது சுந்தரஞ் செட்டியார் கடையிலேயே மளிகை சாமானெல்லாவற்றிற்கும் ஏற்பாடு செய்து விடலாம் என்று பார்த்தசாரதி சொன்னால் அதற்கு ரங்கசாமி அய்யங்கார் "உனக்கும் அந்த கக்கஞ் செட்டிக்கும்தான் சரி. பழைய வீணான சாமான்களையெல்லாம் நம் தலையில் கட்டி விடுவான்" என்றார். இப்படி ஒவ்வொன்றுக்கும் தர்க்கம் வந்து எங்கெங்கே வாங்குவது என்பது தீர்மானமாயிற்று.

கடைசியில் முக்கியமான புடவை, ஜவுளி விஷயம்தான் பாக்கி. சுந்தரவல்லியம்மாள் தன் இரு குமாரர்களையும் கூப்பிட்டு "கல்யாணத்தில் ஜவுளி விஷயம்தான் ரொம்ப முக்கியம். அவன் ஒன்று சொன்னால் நீ ஒன்று சொல்கிறாய். அதேபோல இதற்கும் ஒன்று சொல்லிக் காரியத்தைக் கெடுத்து விடாதீர்கள். நான் சொல்கிறபடி செய்யுங்கள்!" என்று எச்சரித்தாள்.

இதற்கு இருவரும் சம்மதிக்காமல் போகவே கடைசியாக இருவரும் தனித்தனியே ஒரு சீட்டில் எந்தக் கடையில் வாங்கவேண்டும் என்பதை எழுதிப் போட்டுக் குலுக்கி எடுத்த சீட்டில் எந்தப் பெயர் இருக்கிறதோ அங்கேயே வாங்கி விடுவதென்ற முடிவுக்கு வந்தார்கள். சீட்டு குலுக்கிப் போட்டுக் கோமளத்தையே எடுக்கச் சொன்னார்கள். எடுத்ததில் இருந்த பெயரைக் கண்டதும் "என்னுடையதுதான்" என்றார் பார்த்தசாரதி அய்யங்கார். "என்னுடைய சீட்டுன்னா அது" என்று குதித்தார் ரங்கசாமி அய்யங்காரும். காரணம் இருவரும் ஒரே கடையின் பெயரை எழுதியிருந்ததுதான். இரண்டு சீட்டிலும் **"ராதா சில்க் எம்போரியம்"** என்று எழுதியிருப்பதைப் பார்த்த சுந்தரவல்லியம்மாளுக்குப் புரிந்துப் போய் விட்டது. காரணம் நம்பிக்கை, கெட்டிச் சாயம், நீடித்த உழைப்பு, குறைந்த விலை இவைகளுக்குக் கீர்த்தி வாய்ந்த இடம் "ராதா சில்க் எம்போரியம்" ஒன்றுதான் என்பது அவளுக்குத் தெரியும். கேட்பானேன், உடனேயே கோமளம் போனை எடுத்து **8016** நம்பரைக் கூப்பிட்டுத் தனக்கு வேண்டிய விதவிதமான புடவைகளைத் தருவித்துக் கொண்டாள்.

கல்யாண தினத்தன்று சம்பந்தி சடகோபாச்சாரியார் தன் மருமகள் கோமளத்திற்கென்று வாங்கி வந்த புடவையைப்பற்றிச் சிலாகித்துப் பேசி, தான் வாங்கினதுபோல் வேறெங்கும் வாங்க முடியாதென்றும் அந்த ஒரே ஒரு இடத்தில்தான் அந்த மாதிரி ஜவுளி ரகம் கிடைக்குமென்றும் சொல்லிப் புடவையைப் பிரித்துப் போட்டார். எல்லோருக்கும் மிகவும் திருப்தியைத் தந்தது. "அந்தப் புடவை எந்தக் கடையில் எடுத்தீர்கள்?" என்று ரங்கசாமி அய்யங்கார் கேட்கவே "ஏன், என் ஊரிலேயேதான். கடை வீதியில் ராதா சில்க் எம்போரியம்"னு ஒன்று இருக்கிறது. நான் எப்போதும் அங்கேதான் வாங்குவது" என்று சொல்லும்பொழுது அவருக்கும் குதூகலம் தாங்கவில்லை. உடனே பார்த்தசாரதி அய்யங்கார் "போதுமய்யா, போதும். உங்கள் ஊர் கும்பகோணத்தில் இருப்பது பிராஞ்சு. ராதா சில்க் எம்போரியத்தின் ஹெட் ஆபீஸ் மயிலாப்பூர் சன்னதி தெருவிலே இருக்கிறது. நாங்களும் அங்கேதான் எல்லாம் வாங்கியிருக்கிறோம்" என்று பெருமையுடன் சொன்னார்.

உங்களுக்கு வேண்டியதையும் ராதா சில்க் எம்போரியத்திலேயே வாங்கிக் கொள்ளலாம்.

ADVT.

உவமைக் கதை

பகீரதன்

★ வக்கீல் வைத்தியநாத ஐயருக்கு இயற்கையிலேயே ஞாபகமறதி அதிகம். அன்று கோர்ட்டுக்குக் கிளம்பியதிலிருந்து, வீட்டில் என்னத்தையோ வைத்துவிட்டு வந்து விட்டது போன்ற உணர்ச்சி தோன்றி அவரைத் திண்டாட விட்டுக் கொண்டே இருந்தது.

கோர்ட்டில் கைதியைக் கூண்டில் கொண்டு வந்து நிறுத்தினார்கள். வக்கீல் வைத்தியநாத ஐயர்தான் அந்தக் கைதியை விசாரிக்க வேண்டும். ஆனால் அந்தச் சமயத்திலும் அவர் தான் வீட்டில் மறந்து வைத்துவிட்டு வந்தது இன்னதென்று தெரியாமல் திணறிக் கொண்டிருந்தார். இருந்தாலும் கேஸை விசாரித்துத் தொலைக்க வேண்டுமே என்று விசாரிக்க ஆரம்பித்தார்.

"ஏன் அப்பா! நீ அந்த வீட்டிற்குள் போகும் போது வீடு திறந்துதானே இருந்தது?"

"ஆமாங்க! வீடு திறந்துதான் இருந்துங்க!"

"வீட்டிற்குள் போனதும் என்ன செய்தாய்?"

"நான் வீட்டிற்குள் போனால்தானே ஏதாவது செய்வதற்கு?"

"என்ன அப்பா, முதலில் வீடு திறந்துதான் இருந்தது என்கிறாய்! பிறகு வீட்டிற்குள் போகவில்லை என்கிறாய்! எல்லாம் முன்னுக்குப் பின் முரணாக அல்லவா இருக்கிறது?"

கைதி பேசாமலிருந்தான்.

"அது இருக்கட்டும். நீ பணத்தை எடுக்கும்போது இரும்புப் பெட்டி திறந்திருந்ததா? மூடியிருந்ததா?" என்று சாதுர்யமாகக் கேட்டார் வக்கீல்.

"திறந்தாற்போல்தான் இருந்தது!" என்றான் கைதி.

இந்தச் சமயத்தில் வக்கீலுக்குத் தான் வீட்டில் மறந்து வைத்துவிட்டு வந்தது ஞாபகம் வந்து விட்டது. அதை அந்தக் கைதியின் பதிலுக்கு உவமைக் கதையாகச் சொல்ல ஆரம்பித்தார்.

"போலவாவது, கிலவாவது! இப்பொழுது நான் கூடக் கோர்ட்டுக்கு வருகிற அவசரத்தில் என் மேஜையின் மீது இருந்த 'இந்தியன் லா' என்ற புஸ்தகத்துக்கு அடியில் என் மணிபர்ஸை மறந்தாற்போல் வைத்து விட்டு வந்து விட்டேன். அதை நான் அங்கேதான் வைத்து விட்டேன் போலிருக்கிறது!" என்று சொன்னால் எப்படியிருக்கும்? ஆகையால், "இரும்புப் பெட்டி திறந்திருந்ததா, இல்லையா? இருந்தது; இல்லை என்று திட்டமாகப் பதில் சொல்லு" என்றார் வக்கீல்.


கைதி மௌனமாக இருந்தான். வழக்கு தள்ளி வைக்கப்பட்டது.

★ வக்கீல் வைத்தியநாத ஐயர் வீட்டுக்குச் சென்றார். அவரைப் பார்த்ததும், "மணிபர்ஸ் வந்து சேர்ந்ததா?" என்று கேட்டாள் அவருடைய மனைவி.

வக்கீலுக்குத் தூக்கிவாரிப் போட்டது. "மணிபர்ஸாவது என்னிடம் வந்து சேரவாவது? யாரிடம் கொடுத்தனுப்பினாய்?" என்று இரைந்து கேட்டார்.

"நீங்கள்தானே வாங்கி வரச் சொன்னீர்களாம். எனக்குக் கூட நீங்கள் அதை எங்கே வைத்தீர்கள் என்று தெரியாது. வந்த மனிதர்தான் 'மேஜையின் மீது இருக்கும் இந்தியன் லா புஸ்தகத்துக்கு அடியில் வைத்திருக்கிறாராம்' என்று இடத்தைச் சொன்னார்!" என்றாள் வக்கீலின் மனைவி.

அப்பொழுதுதான் வைத்தியநாத ஐயருக்குத் தான் நாலு பேருக்கு முன்னால் கோர்ட்டில் மடத்தனமாகச் சொன்ன உவமைக் கதையின் நினைவு வந்தது!



"என்னங்க, செட்டியார்! டஜன் பிஸ்கட் கன்ட்ரோல் விலை 15 அணு என்று பேப்பரிலே போட்டிருக்கு. நீங்க ஒண்ணேகால் ரூபாய்க்குக் குறைய மாட்டேன் என்றீங்களே!"

"அப்போ, என்கிட்டே வாங்க ஏனய்யா தொந்தரவு பண்ணுறீர்? அந்தப் பேப்பர்காரன் கிட்டேயே வாங்கிக்கிறதுதானே!"

ரதத்தின் சக்கரங்கள் கடகடவென்று உருண்டோடும் சத்தமும் கேட்டன.

சிவகாமிக்கு அப்போது தன்னுடைய உயிரானது தன்னிடம் சொல்லிக் கொள்ளாமல் வெளியில் சென்று ரதத்தின்மேல் ஏறிக்கொண்டு செல்வது போல் தோன்றியது.

நாவுக்கரசர் பெருமானிடம் முடிவாக விடை பெற்றுக் கொண்டு ஆயனரும் சிவகாமியும் கிளம்ப வேண்டிய நேரம் வந்தபோது, பெருமான் ஆயனருக்குச் சமிக்ஞை செய்து அவரைப் பின்னால் நிறுத்தினார். பிறகு, சிறிது தயக்கத்துடன் முன்னால் சென்ற சிவகாமியின் காதில் விழாதபடி மெல்லிய குரலில் பின்வருமாறு கூறினார்:—

"ஆயனரே! உமது புதல்விக்கு வந்திருக்கும் கலை அற்புதக் கலை; தெய்விகக் கலை. அதனாலேயே அவளைக் குறித்து என் மனதில் கவலை உண்டாகிறது. இப்பேர்ப்பட்ட அபூர்வமான மேதா விலாசத்தை இறைவன் யாருக்கு அருளுகிறாரோ, அவர்களைக் கடுமையான சோதனைகளுக்கு உள்ளாக்குவதும் உண்டு. உமக்குத்தான் தெரியுமே? இந்த எளியேனை ஆட்கொள்வதற்கு முன்னால் இறைவன் எத்தனை எத்தனை சோதனைகளுக்கெல்லாம் ஆளாக்கினார்?......"

சற்று முன்பு வரையில் ஆனந்த வெள்ளத்தில் மூழ்கியிருந்த ஆயனர் மேற்கூறிய மொழிகளைக் கேட்டுத் தலையில் திடீரென்று இடி விழுந்தவர் போல் பதறினார்.


"சுவாமி! இதென்ன சொல்கிறீர்கள்? மகா புருஷராகிய தாங்கள் எங்கே? அறியாப் பெண்ணாகிய சிவகாமி எங்கே? அவளுக்கு ஏன் சோதனைகள் வரவேண்டும்? தங்களுடைய திருவாக்கில் இப்படி வந்துவிட்டதே!" என்றார்.

"ஆயனரே! இரைய வேண்டாம். சிவகாமிக்குத் தெரிய வேண்டாம். நீர் முன் ஜாக்கிரதையாக இருப்பது நலம். உமது அருமைக் குமாரியைப் பார்க்கும்போது என் இதயத்தில் ஏனோ ஒரு வகை வேதனை உண்டாகிறது. அவளுக்கு ஏதோ பெரிய துக்கம் நேரப்போகிறது என்று என் உள்ளம் சொல்லுகின்றது. ஆஹா! இத்தகைய வருங்கால திருஷ்டியை இறைவன் எதற்காக எனக்கு அளித்தார்?" என்று கூறியபோது, அந்த மகானின் கண்களில் கண்ணீர் மல்கிற்று.

"ஆனாலும், நீர் தைரியமாக இருக்க வேண்டும். இந்த உலகில் பணி செய்து கிடப்பதே நமது கடன். நம்மைத் தாங்கும் கடன் கருணை வடிவான இறைவனுடையது. உமது பணியைச் செய்துகொண்டு நீர் நிம்மதியாக இரும். எத்தனை சோதனைகள் நேர்ந்தாலும் மனம் கலங்க வேண்டாம். அன்பர்களுக்கு முதலில் எவ்வளவு துன்பங்களை அளித்தாலும் முடிவில் இறைவன் ஆட்கொள்வார். இந்த எண்ணத்தினால்தானே, அடியேன் எத்தனையோ கொடுந் துன்பங்களையெல்லாம் பொறுத்துக்கொள்ள முடிந்தது. ஆயனரே! சிவகாமி காத்துக் கொண்டிருக்கிறாள். போய் வாருங்கள். குழந்தையைக் கண்ணும் கருத்துமாய்ப் பார்த்துக் கொள்ளுங்கள்."

இவ்விதம் கூறிவிட்டு நாவுக்கரசர் மடத்துக்குள்ளே சென்றார்.

சாயங்காலம் அந்தத் திருமடத்துக்குள்ளே பிரவேசித்தபோது உள்ளம் நிறைந்த குதூகலத்துடன் பிரவேசித்த ஆயனச் சிற்பியார், மடத்திலிருந்து வெளியேறியபோது, இதயத்தலே பெரியதொரு பாரத்துடன் வெளியேறினார். அபூர்வமான வேலைப்பாடுகளுடன் அவர் சிற்பப் பணி செய்துகொண்டிருந்த பெரியதொரு பாருங் கல்லைத் தூக்கி அவருடைய இதயத்தின் மேலேயே யாரோ வைத்துவிட்டது போலிருந்தது!



வாகீசர் அங்கே சூழ்ந்து நின்றவர்களைப் பார்த்து, "நீங்களும் போகலாம்!" என்று சமிக்ஞையால் கூற, எல்லாரும் தயக்கத்துடன் அங்கிருந்து கலைந்து சென்றார்கள்.

மாமல்லர் வாசற்படியின் அருகில் நின்று ஏவலாளன் ஒருவனுடன் ஏதோ பேசிவிட்டு, உள்ளே வந்தார். நாவுக்கரசரை நோக்கிக் கைகூப்பி, "சுவாமி! மதுரையிலிருந்து தூதர்கள் வந்திருப்பதாக அன்னை அவசரமாக அழைத்து வரச் சொல்லியிருக்கிறார். நான் போய் வருகிறேன்" என்றார்.

"அப்படியே, குமார சக்கரவர்த்தி! தந்தைக்குச் செய்தி அனுப்பினால், அவருடைய அபிப்பிராயப்படியே நான் தென் தேசத்துக்கு யாத்திரை போவதாகத் தெரியப்படுத்த வேணும்" என்றார்.

"ஆகட்டும், சுவாமி!" என்று மாமல்லர் கூறி, ஆயனரைப் பார்த்து, "துறைமுகம் போய்ச் சேர்ந்ததும், சிவகாமியின் சௌக்கியத்தைப் பற்றிச் செய்தி அனுப்புங்கள், சிற்பியாரே! சில காரணங்களினால் நான் கொஞ்ச காலத்துக்குக் காஞ்சியை விட்டு வெளிக் கிளம்ப முடியாமலிருக்கிறது" என்றார்.

இவ்விதம் பேசி வருகையில் மாமல்லர் அடிக்கடி சிவகாமியை நோக்கி, அவளிடம் நயன பாஷையினால் விடை பெற்றுக் கொள்ள விரும்பினார். ஆனால், சிவகாமியோ, ஆயனரின் பின்னால் குனிந்த தலை நிமிராமல் நின்று கொண்டிருந்தாள்.


எனவே, குமார சக்கரவர்த்தி ஆயனரிடம் விடை பெற்றுக்கொண்டு சிவகாமியிடம் சொல்லிக் கொள்ளாமலே கிளம்ப வேண்டியதாயிற்று. போகும்போது, நாவுக்கரசர் பெருமான் அங்கிருப்பதைக் கூட அவர் மறந்து, 'தட்' 'தட்' என்று அடி வைத்து நடந்து சென்றதானது, ஆத்திரங் கொண்ட அவருடைய மனோநிலையை நன்கு பிரதிபலித்தது.

சற்று நேரத்துக்கெல்லாம் வாசலில் குதிரைகளின் காலடிச் சத்தமும்,



உண்மையாகவே அது தெய்வக் கலை யாகப் போகிறது. ஆமாம், ஆயனரே! தங்கள் புதல்வி பெற்றிருக்கும் கலைச் செல்வமானது மானிடவர்க்கத்துக்கே உரியதன்று. இதை நன்கு அறிந்து அநுபவிக்கும் சக்தி மனிதர்களுக்குக் கிடையாது. தில்லைப் பொன்னம்பலத்தில் திரு நடனம் புரியும் இறைவனுக்கே அர்ப்பணமாக வேண்டிய அற்புதக் கலை இது!......"

இவ்விதம் சுவாமிகளின் திருவாயி லிருந்து வெளியான அருள் மொழிகளை அனைவரும் ஆவலுடன் பருகிக் கொண்டிருந்த சமயத்தில், வீதியில் குதிரை யொன்று விரைவாக வரும் சத்தம் கேட்டது. அந்தச் சத்தம் மடத்தின் வாசலில் வந்து நின்றது. உடனே, குமார சக்கரவர்த்தி மடத்தின் வாசற் படியை நோக்கிச் சென்றார்.



பின் தொடர்ந்து குமார சக்கரவர்த்தியும் பரபரப்புடன் சென்றார்.

ஆயனர், சிவகாமி கிடந்த இடத்துக்கு அருகில் தரையில் உட்கார்ந்தார். அவருடைய அங்கங்கள் எல்லாம் பதறின. அதைப் பார்த்த மாமல்லர், தரையில் உதிர்ந்து கிடக்கும் மென்மையான மலர்களை அடியார் ஒருவர் இறைவனுடைய அர்ச்சனைக்காகப் பொறுக்கும் பாவனையுடனே சிவகாமியைத் தமது இரு கரங்களாலும் மிருதுவாக எடுத்து ஆயனரின் மடியின் மீது இருத்தினார்.

அதற்குள்ளாக அங்கிருந்தவர்களில் பலர் எழுந்து ஓடி வந்து அம் மூவரையும் சுற்றிக் கொண்டார்கள். சிலர் "தண்ணீர்! தண்ணீர்!" என்றார்கள். சிலர் "விசிறி! விசிறி!" என்றார்கள்.

"வழியை விடுங்கள்!" என்று அதிகார தோரணையில் ஒரு குரல் கேட்டது. அது மாமல்லரின் குரல்தான். நாவுக்கரசர் பெருமான் தமது ஆசனத்திலிருந்து எழுந்து வருவதைப் பார்த்து விட்டுத்தான் அவர் அவ்விதம் அதிகாரத்துடன் சொன்னார்.

உடனே, வழியும் விடப்பட்டது. சுவாமிகள் சிவகாமியின் அருகில் வந்தார். அவருடைய கண்களிலே பெருகிக் கொண்டிருந்த ஆனந்தக் கண்ணீர் அருவி இன்னும் நின்றபாடில்லை. ஆயனரின் மடியில் தலை வைத்து உணர்வின்றிப் படுத்திருந்த சிவகாமியின் முகத்தை அவர் கருணை ததும்பும் கண்களினால் பார்த்தார். தமது திருக்கரத்தில் கொண்டு வந்திருந்த திருநீற்றை அவளுடைய நெற்றியில் இட்டார். அப்போது அவருடைய நாவானது 'நமசிவாய' மந்திரத்தை உச்சரித்தது.

சற்று நேரம் அந்த மண்டபத்தில் ஊசி விழும் சத்தமும் கேட்கும்படியான மௌனம் குடி கொண்டிருந்தது.

எல்லாருடைய கண்களும் கருத்தும் சிவகாமியின் முகத்திலேயே இருந்தன.

காலை நேரத்தில் கருங் குவளையின் இதழ் விரிவதுபோல், சிவகாமியின் கண்ணிமைகள் மெதுவாகத் திறந்தன.

திறந்த கண்கள் நாவுக்கரசரின் திருமுகத்தை முதலில் தரிசித்தன. தந்தையின் மடியில் படுத்தபடியே சிவகாமி இரு கரங்களையும் கூப்பி அந்த மகா புருஷரைக் கும்பிட்டாள்.

"நீ மகராஜியாய் இருக்கவேணும், குழந்தாய்!" என்று வாகீசப் பெருமான் ஆசி கூறினார்.

அந்த ஆசியைக்கேட்ட சிவகாமியின் பவள நிற இதழ்களில் புன்னகையின் ரேகை தோன்றியது. அது தாமரைத் தடாகத்தில் செவ்வாம்பல் பூவானது வெட்கத்தினால் தயங்கித் தயங்கி மடலவிழ்வதுபோல் இருந்தது.

பின்னர், அவளுடைய கருவிழிகள் இரண்டும், எதையோ தேடுவதைப் போல் அங்குமிங்கும் அலைந்து, கடைசியில் குமார சக்கரவர்த்தியின் திருமுகத்தைப் பார்த்ததும் அங்கேயே தங்கிவிட்டன.

"சுவாமிகள் எனக்குக் கூறிய ஆசிமொழி தங்கள் திருச் செவியில் விழுந்ததா?" என்று அக் கண்கள் மாமல்லரைக் கேட்டதுடன், அவருடைய குற்றங்களை யெல்லாம் மறந்து மீண்டும் அவருடன் சிநேகமாயிருக்கச் சித்தமா யிருப்பதையும் தெரியப் படுத்தின.

மறுபடியும் சுவாமிகளின் குரல் கேட்கவே, சிவகாமி பூரண சுய உணர்வு வந்தவளாய்ச் சட்டென்று எழுந்து நின்றாள். இவ்வளவு பேருக்கு நடுவில் தான் மூர்ச்சையாகி விழுந்ததை எண்ண அவளுக்குப் பெரிதும் வெட்கமாயிருந்தது. நாணத்தினால் அவளுடைய தலை குனிந்தது.

வாகீசர் கூறினார்:— "ஆயனரே! பரதக் கலையின் சிறப்பைக் குறித்து நான் படித்தும், கேட்டும் அறிந்திருக்கிறேன். ஆனால் அதனுடைய பூரண மகிமையையும் இன்றுதான் அறிந்தேன். என்னுடைய வாக்கிலே வந்த பாடலில் இவ்வளவு அநுபவமும் இவ்வளவு உணர்ச்சியும் உண்டென்பதை இதற்கு முன்னால் நானே அறியவில்லை. சிவகாமி அபிநயம் பிடித்த போதுதான் தெரிந்துகொண்டேன். தங்கள் குமாரியினால் பரத சாஸ்திரமே பெருமையடையப் போகிறது.

எவ்விதம் மனங் கொள்கிறாள் என்பதையும், காதலுக்குத் தடையாக நிற்கும் சமூக ஆசாரங்களை யெல்லாம் புறக்கணித்து ஒதுக்கவும் ஊராரின் நிந்தனைகளை யெல்லாம் பொறுத்துக் கொள்ளவும் அவள் எவ்வாறு மனந் துணிகிறாள் என்பதையும் நேருக்கு நேரே பார்த்தார்கள்.

மேற்கூறிய வாக்கினால் விவரிக்க முடியாத உணர்ச்சிகளை யெல்லாம், —பெண் உள்ளத்தில் படிப்படியாகக் காதல் முதிர்ந்து வரும் அபூர்வ பாவங்களை யெல்லாம்.—சிவகாமி அபிநயத்தில் காட்டி வந்தபோது, அங்கிருந்து பார்த்துக் கொண்டிருந்தவர்களுக்கு, "இது சாமான்யமான மனித வர்க்கத்துக்குரிய காதல் அல்ல;—அண்ட பகிரண்டங்களுக் கெல்லாம் இறைவனாகிய எம்பெருமானுக்கே உரிய தெய்விகக் காதல்!" என்று தோன்றலாயிற்று. "ஆதி பராசக்தி ஆதி பரம் பொருளிடம் கொண்ட காதல்,—உமா தேவி பரமசிவனிடம் கொண்ட காதல் — இவ்விதந்தான் இருந்திருக்க வேண்டும்!" என்று அவர்கள் கருதினார்கள்.

தக்ஷ ராஜனுடைய புதல்வி தாக்ஷாயணி, தந்தைதாயாரைப் புறக்கணித்து விட்டு, ஊரார் சிரிக்க, உற்றார் வசை கூற, விரித்த சடையும் கரித்தோல் உடையுமாய் விளங்கிய பேயாண்டியிடம் பிரேமை கொண்டு புறப்பட்ட காட்சி அவர்கள் மனக்கண் முன்னால் தோன்றியது. விதர்ப்ப நாட்டரசனின் புதல்வி ருக்மணி, கண்ணனைப் பற்றிக் கேள்வியுற்று அவனிடம் காதல் கொண்டு, தாய் தந்தையரைக் கேளாமல், தமையன் விருப்பத்தை மதியாமல், கள்ள உள்ளத்துடன் காளி கோயிலுக்குச் சென்று, அங்கு வந்த மாயக் கண்ணனுடன் தேரில் ஏறிச் சென்ற காட்சி அவர்கள் கண்ணெதிரே தோன்றியது.

இப்படியாக, பாவனா உலகத்தில் உண்டாகிப் பெருகிய உணர்ச்சி வெள்ளமானது காணாத காட்சிகளை யெல்லாம் அவர்களைக் காணச் செய்தது; என்று மறியாத இன்பங்களையும், இன்ப வேதனையையும் அனுபவிக்கச் செய்தது.

அவ்வளவுடன் நின்றுவிடவில்லை. காதல் பரிபூரண மடைவதற்கு இன்னும் ஒரு படி ஏறவேண்டியிருக்கிறது. காதலி தனக்காக இவ்வளவெல்லாம் தியாகங்களைச் செய்யச் சித்தமாயிருந்தும், அந்தத் தெய்வக் காதலன் திருப்தியடையவில்லை. மேலும் அவளைச் சோதனைக்குள்ளாக்க விரும்பித் திடீரென்று ஒரு நாள் மறைந்து விடுகிறான். காதலன் தன்னைக் கைவிட்டுச் சென்றுவிட்டான் என்ற காதலியின் பிரமையிலே காதல் பரிபூரண நிலைமையை அடைகிறது. சோகக் கடலிலே மூழ்கிய காதலி வெளி உலகை அடியோடு மறந்து விடுகிறாள். தன்னையும் மறந்து விடுகிறாள். தன் பெயரைக் கூட மறந்துவிடுகிறாள். "உன் பெயர் என்ன?" என்று யாரேனும் கேட்டால், காதலனின் திருநாமத்தைச் சொல்கிறாள்! அத்தகைய மனோ நிலையில் மறுபடியும் தெய்வக் காதலன் அவள் முன்னால் தோன்றும்போது, காதலியானவள் தான் செய்யாத குற்றங்களுக்காகத் தன்னை மன்னித்து விடும்படி கோரி அவனுடைய திருப்பாதங்களில் நமஸ்கரிக்கிறாள்!

படிப்படியாக மேற்கூறிய உணர்ச்சிகளை யெல்லாம் முகபாவத்திலும் கண்களின் தோற்றத்திலும் அங்கங்களின் அசைவிலும் சைகைகளிலும் காட்டிக் கொண்டு வந்த சிவகாமி, கடைசியில்,


"தலைப்பட்டாள் நங்கை
தலைவன் தாளே!"

என்று பாடிவிட்டுக் கூப்பிய கரங்களுடன் அடியற்ற மரம்போல் தரையில் விழுந்தாள்!

உடனே சபையில் "ஹா! ஹா! ஹா!" என்ற குரல்கள் எழுந்தன. ஆனால் யாரும் இருந்த இடம் விட்டுப் பெயரவில்லை. யாருக்கும் இன்னது நடந்திருக்கிறது, இன்னது செய்ய வேண்டும் என்றே விளங்கவில்லை.

தரையில் விழுந்த சிவகாமி அப்படியே கிடந்தாள். சற்று நேரமாகியும் அவள் எழுந்திருக்கவில்லை.

திடீரென்று "சிவகாமி!" என்று கூவிக்கொண்டு ஆயனர் எழுந்தார். எழுந்து, அவள் கிடந்த இடத்தை நோக்கி விரைந்து ஓடினார். அவரைப்



முப்பத்தாறும் அத்தியாயம்

வாகீசரின் ஆசி

அகத்துறைப் பாடல் ஒன்றுக்கு அபிநயம் பிடிக்கும்படி ஆயனர் பணித்ததும், சிவகாமி நாவுக்கரசரின் திருவாரூர்த் தாண்டகத்திலிருந்து ஒரு பாடலை அபிராமி பழம் பஞ்சுரம் என்னும் பண்ணில் அமைத்துப் பாடினாள். ஒரு கன்னிகையானவள் முதன் முதலிலே இறைவனுடைய திருநாமத்தைச் செவியுறுகிறாள். அப்போது அவளுடைய உள்ளத்தில் அரும்பும் பக்திக் காதலானது படிப்படியாக எப்படி வளர்ந்து பெருங் கனலாகிக் கொழுந்து விட்டெரிகிறது என்பதைக் கூறும் அத்திருப் பாடல் வருமாறு :—

"முன்னம் அவனுடைய
நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும்
வண்ணம் கேட்டாள்

பின்னை அவனுடைய
ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே
பிச்சி யானாள்

அன்னையையும் அத்தனையும்
அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார்
ஆசாரத்தைத்

தன்னை மறந்தாள் தன்
நாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை
தலைவன் தாளே !"

பாடலை ஒரு முறை முழுதும் பாடிவிட்டு, மீண்டும் முதலிலிருந்து தொடங்கி அபிநயம் பிடிக்கத் தொடங்கினாள் சிவகாமி. அப்போது பார்த்துக் கொண்டிருந்தவர்களுக்கு, இவ்வுலகம் தோன்றிய நாளிலிருந்து பெண் உள்ளத்தில் அரும்பி மலர்ந்த காதல் உணர்ச்சியே ஓர் உருக் கொண்டு அவர்கள் முன்னால் நிற்பது போல் தோன்றியது. முதன் முதலில் ஓர் இளம் கன்னிகையின் இதயத்தில் காதல் உதயமாகும் போது அதனுடன் பிறக்கும் நாணங்கலந்த இன்பப் பெருக்கை அவர்கள் கண் முன்னால் பார்த்தார்கள். காதல் வளர்ந்துவரும் ஆரம்ப நாட்களில் காதலனுடைய பெயரைக் கேட்கும் போதும், அவனுடைய இருப்பிடம் முதலிய வரலாறுகளை அறியும்போதும், அவனுடைய குணாதிசயங்கள் வர்ணிக்கப்படும் போதும் பெண் இதயத்தில் பொங்கித் ததும்பும் ஆனந்தக் குதூகலத்தையும், அதனால் அவளுடைய மேனியில் ஏற்படும் அதிசயமான மாறுதல்களையும் பிரத்யட்சமாகப் பார்த்தார்கள். நாளடைவில் அந்தக் காதலானது முற்றும்போது, எப்படி அது பைத்தியத்தின் சுபாவத்தை எய்தி, காதலியைச் சித்தப் பிரமை கொண்டவளாக்குகிறது என்பதையும் கண்டார்கள். அந்த நிலையில், காதலுக்காகவும் காதலனுக்காகவும் பெண்ணானவள் எப்பேர்ப்பட்ட தியாகங்களையெல்லாம் செய்யச் சித்தமாகி விடுகிறாள் என்பதையும், பெற்று வளர்த்த அன்னையையும் அப்பனையும் விட்டு விட்டுக் காதலனோடு புறப்பட

தாரகள் பிக்ஷை வாங்கிக்கொண்டு வீட்டுக்கு வந்தார்கள். பீமசேனன் முகத்தில் புதிய ஒரு மகிழ்ச்சிக் குறிப்பைக் கண்ட தரும புத்திரன் குந்தியிடம் போய் "அம்மா! பீமன் ரொம்ப சந்தோஷமாக இருக்கிறானே, அவன் என்ன செய்ய யோசித்திருக்கிறான்?" என்று கேட்டான். குந்தி விஷயத்தைச் சொன்னான்.

யுதிஷ்டிரன் "இதென்ன, செய்யக் கூடாத சாகஸத்தை செய்கிறாய்! பீமனுடைய வலிமையை ஆதாரமாகக் கொண்டு நாம் சிந்தையற்றுத் தூங்குகிறோம். வஞ்சகர்கள் பறித்துக் கொண்ட ராஜ்யத்தை இவனுடைய பராக்கிரமத்தால் அல்லவோ மறுபடி அடைய எதிர் பார்க்கிறோம்? பீமனால் அல்லவோ நாம் அரக்கு மாளிகையில் தீக்கு இரை யாகாமல் தப்பினோம்? இந்த பீமனை இழப்பதற்கு வழிதேடினாயே! துயரங்களினால் மனம் நொந்து போய்ப் புத்தியை இழந்து விட்டாய் போலிருக்கிறது" என்றான்.

யுதிஷ்டிரன் இவ்வாறு சொல்ல, குந்தி தேவி, "யுதிஷ்டிரனே! இந்த பிராமணர் வீட்டில் நாம் பல நாள் சுகமாக வசித்தோம்; மனிதனுக்கு லக்ஷணம் உபகாரத்துக்குப் பிரதி உபகாரம் செய்வதே யாகும். பீமனுடைய பராக்கிரமத்தை நான் அறிவேன், நீ பயப்பட வேண்டாம். வாரணாவதத்தி லிருந்து நம்மனைவரையும் தூக்கி வந்த பீமன், இடும்பனைக் கொன்ற பீமன், இவனிடத்தில் எனக்கு பூரண நம்பிக்கை. இந்தக் காரியத்தை செய்வது நம்முடைய கடமை" என்றான்.

பிறகு நகரவாசிகள் பலவகை மாமிசங்களோடு சேர்ந்த அன்னத்தையும் குடங்கள் நிறையத் தயிரும் பானங்களும் வண்டியில் வைத்துக்கொண்டு வந்தார்கள். இரண்டு கருப்புக் காளைமாடுகளைப் பூட்டிய அந்த வண்டியில் பீமன் ஏறி அரக்கனுடைய குகைக்குச் சென்றான்.

வாத்திய முழக்கத்தோடு பீமன் வண்டியை ஓட்டிப் போனான். குறிப்பிட்ட ஒரு இடம் சென்றதும் கூட வந்த ஊர் ஜனங்கள் நின்று விட்டார்கள். பீமன் மட்டும் வண்டியை ஓட்டிப் போனான். அவ்விடத்தில் எலும்பும், மயிரும், ரத்தமும் கிடந்தன. துண்டுபட்டுச் சிதறிக் கிடக்கும் கை கால் தலைகளையும் கண்டான். கழுகுகள் வட்டமிட்டுக் கொண்டிருந்தன. பொறுக்க முடியாத நாற்றமாக இருந்தது. பீமன் வண்டியை நிறுத்தி விட்டுப் போஜன பண்டங்களை எல்லாம் அவசர அவசரமாகச் சாப்பிட ஆரம்பித்தான். "இது மறுபடி எனக்குக் கிடைக்காது. நான் அரக்கனோடு யுத்தம் செய்யும் போது அன்னமெல்லாம் இறைந்து போய் விடும். தவிர இந்த அரக்கனைக் கொன்ற பிறகு பிணம் தொட்ட தீட்டு உண்டாகும், சாப்பிட முடியாது" என்று முன்னதாகவே எல்லாவற்றையும் சாப்பிட்டு விடுவதாகத் தீர்மானித்து அவ்வாறே செய்ய ஆரம்பித்தான்.

வெகு நேரம் கோபத்துடன் காத்துக் கொண்டிருந்த அரக்கன் பீமன் செய்ததை எல்லாம் தூரத்திலிருந்து பார்த்தான். பீமனும் அரக்கனைக் கண்டு அவனைப் பெயரிட்டு அழைத்தான். பெரிய சரீரமும் சிவந்த மீசையும் தாடியும் தலை மயிரும் காது வரையில் அகன்ற வாயும்கொண்ட அந்த பயங்கரமான அரக்கன் மிகவும் கோபாவேசமாக ஓடி வந்தான். பீமசேனன் சிரித்துக் கொண்டே அவனைக் கவனிக்காதவன் போல் அவனுக்கு முதுகைக் காட்டிக்கொண்டு அன்னத்தைச் சாப்பிட்டுக் கொண்டே இருந்தான். ராக்ஷசன் ஓடி வந்து முதுகில் ஒரு அறை அறைந்தான். பீமன் அந்த அடியை வாங்கிக்கொண்டு திரும்பிப் பாராமல் சாப்பிட்டுக் கொண்டே இருந்தான். அரக்கன் போய் ஒரு மரத்தைப் பிடுங்கி எடுத்து அதைப் பீமசேனன் மேல் எறிந்தான். பீமன் திரும்பிப் பாராமல் இடது கையினால் அதைத் தடுத்து வலது கையைக் கொண்டு சாப்பிட்டுக் கொண்டேயிருந்தான். பிறகு குடத்தை எடுத்துத் தயிரையும் குடித்து விட்டு வாயைத் துடைத்துக்கொண்டு எழுந்து ராக்ஷசனைத் திரும்பிப் பார்த்தான்.

இருவருக்கும் பெரிய யுத்தம் நடந்தது. பகனை பீமன் உதைத்துக் கீழே தள்ளி "ராக்ஷசா! களைப்பாறு" என்றான். பிறகு "எழுந்து வா!" என்றான். அசுரன் எழுந்து மறுபடியும் யுத்தம் செய்ய ஆரம்பித்தான். அநேகந்தடவை பீமனால் தள்ளப்பட்டு மீண்டும் மீண்டும் எழுந்து வந்து போர் புரிந்தான். முடிவில் பீமன் அரக்கனைக் கீழே தள்ளி முதுகின் மேல் முழங்காலை வைத்து அவன் எலும்பை முறித்தான். அசுரன் பயங்கரமான சப்தம்செய்து வாயில் ரத்தம் கக்கிக் கொண்டு உயிர் நீத்தான். பிணத்தை பீமன் இழுத்துவந்து நகரத்தின் கோபுர வாயிலில் போட்ட பிறகு பிராமணனுடைய வீட்டுக்குப் போய் ஸ்நானம் செய்துவிட்டுத் தாயாரிடம் நடந்ததைச் சொல்லி அவளை மகிழச் செய்தான்.

"அம்மணி! உன்னால் என்ன செய்ய முடியும்? இந்த ஊருக்கு அருகில் ஒரு குகை இருக்கிறது. அதில் ஒரு கொடிய அரக்கன் இருக்கிறான். அவன் பெயர் பகாசுரன். மிகுந்த பலவான். அவன் இந்த தேசத்தையும் நகரத்தையும் பிடித்துக் கொண்டிருக்கிறான். சென்ற பதின்மூன்று வருஷங்களாக அவனால் இந்த நகரம் பிடிக்கப்பட்டு வருகிறது. இந்த தேசத்துக்கு அரசனாயிருக்கும் க்ஷத்திரியன் வேத்திரகீய நகரத்திலிருக்கிறான். அவனால் நம்மைக் காப்பாற்ற முடியவில்லை. இந்த அரக்கன் குகையில் வசித்துக்கொண்டு ஊரிலுள்ள ஸ்திரீகள், பாலர், விருத்தர்கள் எல்லாரையும் இஷ்டப்படி கொன்று தின்று கொண்டுவந்தான். ஊரார் எல்லாரும் சேர்ந்து ஒரு நியமம் செய்து கொள்ளும்படி அவனைக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டார்கள். 'நினைத்தபடி கொல்லாதே, உனக்கு வேண்டிய மாமிசமும், அன்னமும், சாராயமும் கள்ளும் பலவித பானங்களும் தயிரும் பாத்திரங்களில் வைத்து வண்டிக்கு இரண்டு கறுப்புக் காளை மாடுகளையும் கட்டி வீட்டுக்கு ஒரு மனிதனாக முறையாக அனுப்புகிறோம். நீ அன்னத்தையும் மாடுகளையும் ஆளையும் தின்று விட்டு மற்றவர்களை இம்சிக்காமலிருக்க வேண்டும்' என்று ஊரார் வேண்டிக் கொள்ள, அவனும் அங்கீகரித்து அவ்வாறே நடந்து வருகிறது. அது முதல் இந்த பலவானான அரக்கன் மற்ற பகைவர்களிடத்தி லிருந்தும், காட்டு மிருகங்களிடத்திலிருந்தும் இந்த தேசத்தை ரக்ஷித்து வருகிறான். இந்த உடன்படிக்கைப்படி அனேக வருஷங்களாக நடந்துவருகிறது.

"இந்தக் கஷ்டத்தினின்று தேசத்தை விடுவிக்க யாராவது எங்கேயாவது ஆரம்பம் செய்தால் அவர்களை உடனே அந்த ராக்ஷசன் பிள்ளை பெண்களுடன் கொன்று தின்றுவிட்டு அடக்கி வருகிறான். அம்மணி, எங்கள் பரம்பரை அரசன் எங்களைக் காப்பாற்ற முடியவில்லை. சக்தியுள்ள ராஜாவை அடையாத ஜனங்கள் மனைவி மக்களைப் பெறுதலே கூடாது. முதலில் தகுந்த அரசனை அடைய வேண்டும். அதன்பிறகே மனைவியையும் தனதானியங்களையும் அடையவேண்டும். சரியான அரசன் இல்லாவிடில் மனைவி ஏது, தனம் ஏது? இந்த ஆபத்தில் சிக்கினவர்களாகிய நாம் தவிக்கிறோம். இந்த வாரத்தில் ஆளை அனுப்பும் முறை இந்தக் குடும்பத்திற்கு நேர்ந்திருக்கிறது. எங்கேயாவது ஒருவனை விலைகொடுத்து வாங்கி அனுப்புவதற்கு எனக்குப் பொருள் கிடையாது. மனைவியையாவது குழந்தையையாவது அரக்கனிடம் அனுப்ப என்னால் முடியவில்லை. எல்லாரையும் கூட்டிக்கொண்டு அரக்கனிடம் நான் செல்வேன். எங்கள் எல்லாரையும் சேர்த்து அந்தப் பாவி தின்றுவிடட்டும். அம்மா! நீ கேட்டதால் உனக்குச் சொன்னேன்" என்றான்.

குந்தி பீமனுடன் கலந்து பேசிவிட்டுத் திரும்பி வந்து சொன்னாள்: "இந்த பயத்திற்காக நீங்கள் துன்பப்பட வேண்டாம். எனக்கு ஐந்து குமாரர்கள் இருக்கிறார்கள். அவர்களில் ஒருவன் இந்த அரக்கனுக்கு இரையை எடுத்துக்கொண்டு செல்வான்" என்றாள்.

பிராமணன், "ஐயோ! கூடாது! அதிதியாக வந்திருக்கும் உன் மகனுடைய உயிரை எனக்காக அழியச் செய்ய நான் ஒப்பமாட்டேன்" என்றான்.

குந்தி "பிராம்மணரே! பயப்படாதீர். என் மகன் மந்திர சக்தி பெற்றவன். அந்த அரக்கனைக் கொன்று வருவான். இவன் அவ்வாறு அரக்கர்களைக் கொன்றதையும் நான் பார்த்திருக்கிறேன். ஆனால் இதை நீங்கள் யாரிடத்திலும் சொல்லக் கூடாது. சொன்னால் அந்த வித்தை இவனுக்கு உதவாது" என்றாள்.



வெளியே தெரிந்தால் துரியோதனனுடைய ஆட்களுக்கு இவர்கள் பாண்டவர்கள் என்று தெரிந்து போகும் என்று பயந்து இவ்வாறு கேட்டுக்கொண்டாள்.

பீமனுக்குத் தாங்க முடியாத சந்தோஷமும் உற்சாகமும் உண்டாயிற்று. சகோ

பிண்ட தர்ப்பணங்கள் கொடுக்கும் அருமைப் புதல்வனை எவ்வாறு யமனுக்கு அனுப்பி விட்டு நாம் பிழைத்திருக்க முடியும்? ஐயோ! என் சொல்லை நீ கேட்கவில்லை. பலனை இப்போது அனுபவிக்க வேண்டும். நான் என் சரீரத்தை விட்டு யமலோகம் சென்றால் இந்தச் சிறுமியும் சிறுவனும் இந்த உலகத்தில் ஜீவித்திருக்க முடியாது. நான் என்ன செய்வேன்? எல்லாருடனும் கூட இறந்து போவது சிலாக்கியம்'' என்று பிராமணன் சொல்லி விம்மி விம்மி அழுதான்.

பிராம்மணனுடைய மனைவி சொன்னாள். ''மனைவியைப் புருஷன் எதற்காகக் கொள்ளுகிறானோ அந்தப் பிரயோஜனம் நீர் என்னால் பெற்றாகிவிட்டது. ஒரு புத்திரியையும் ஒரு புத்திரனையும் நீர் என்னிடம் அடைந்தீர். என் கடனை நான் தீர்த்து விட்டேன். குழந்தைகளை வளர்ப்பதற்கும் காப்பதற்கும் உமக்குச் சக்தி உண்டு. நீர் இல்லாமல் என்னால் அது செய்ய முடியாது. வெளியில் போடப்பட்ட மாமிசத்தைப் பறவைகள் தூக்கிப் போக எவ்வாறு காத்துக் கொண்டிருக்கின்றனவோ அவ்வாறே புருஷனில்லாத ஸ்திரீயை எல்லா ஜனங்களும் ஏமாற்றவும் அபகரிக்கவும் விரும்புகின்றார்கள். துஷ்ட ஜனங்கள் நிறைந்திருக்கும் இவ்வுலகத்தில் அநாதையான பெண் வாழ்வது கஷ்டம். நெய்யில் நனைக்கப்பட்ட துணியை நாய்கள் எப்படிப் பிடித்திழுக்குமோ அப்படி நாதனில்லாத பெண்கள் துஷ்டர்கள் கையில் சிக்கிக்கொண்டு நாலா பக்கத்திலும் இழுக்கப்பட்டு அலைவார்கள். நாதன் அற்றுப்போன இந்தக் குழந்தையை நான் சரியாக வளர்த்துக் காப்பாற்றுவது முடியாத காரியம். குளத்தில் ஜலம் வற்றிப் போனால் மீன்கள் எவ்வாறு அழியுமோ அவ்வாறு இந்தக் குழந்தைகள் இருவரும் நாசமடைவார்கள். அரக்கனுக்கு என்னைக் கொடுத்து விடுவதே மேலாகும். புருஷன் இருக்கும்போது ஸ்திரீயானவள் பரலோகமடைவதே பெரும் பாக்கியம். இதுவே சாஸ்திரம். எனக்கு விடைகொடும். என் குழந்தைகளைக் காப்பாற்றும். நான் விரும்பினவற்றை அனுபவித்தாயிற்று. தருமானுஷ்டானம் செய்தேன். உமக்குப் பணிவிடை செய்ததினால் புண்ணிய லோகமும் பெறுவேன். மரணம் என்னை வருத்தாது. நான் போனபின் நீர் வேறொரு ஸ்திரீயை அடைய முடியும். நீர் சந்தோஷமாய் என்னை அரக்கனிடம் அனுப்பி விடும்''

இவ்வாறு மனைவியால் சொல்லப்பட்ட பிராமணன் அவளைத் தழுவிக்கொண்டு ஸ்திரீயைப்போல் மெல்லிய குரலில் தானும் கண்ணீர் விட்டழுதான்.

''அன்புள்ளவளே! சுந்தரி! இவ்வாறு பேசாதே. இத்தகைய ஞானமுள்ள மனைவியை ஒருபோதும் விடத்தகாது. புத்தியுள்ள புருஷன் இவ்வுலகத்தில் ஸ்திரீயை ரக்ஷிக்க வேண்டியது முதல் கடமை. எக்காலத்திலும் விடத்தகாத ஸ்திரீயை அரக்கனுக்குக் கொடுத்து விட்டுப் புருஷன் ஜீவிப்பானாயின் அவன் பாபியாவான்'' என்றான்.

தாயும் தகப்பனும் பேசினதைக் கேட்டுக்கொண்டிருந்த மகள், ''நான் சொல்லுவதைக் கேளுங்கள். கேட்டுவிட்டுப் பிறகு உசிதப்படி செய்யுங்கள். என்னை அரக்கனிடம் அனுப்பிவிடுங்கள். நான்தான் உங்களால் இழக்கத்தக்கவள். என் ஒருத்தியைக்கொண்டு எல்லாவற்றையும் காப்பாற்றிக் கொள்ளுங்கள். ஓடத்தைக் கொண்டு தண்ணீரைத் தாண்டுவதுபோல் என்னைக் கொண்டு ஆபத்தைத் தாண்டுங்கள். நீங்கள் பரலோகம் சென்றால் என் சகோதரன் இந்தக் குழந்தை சீக்கிரம் இறந்து போவான். தந்தையே! நீர் இறந்தால் சிறு பெண்ணாகிய நான் அநாதையாகி விசனத்தில் சிக்கிக் கஷ்டப்படுவேன். நான் சொல்லியவாறு இந்தக் குலத்திற்கு விமோசனம் தரக்கூடிய நிலையில் நான் இருக்கிறேன். இதனால் என் பிறவி பயனுள்ளதாகும். என்னுடைய நன்மையைக் கருதியே நீர் என்னை அரக்கனுக்கு அனுப்பவேண்டும்.''

இவ்வாறு பிரியமான பெண் சொல்லத் தந்தையும் தாயும் இருவரும் அவளைத் தழுவி முத்தமிட்டு அழுதார்கள். எல்லாரும் அழுவதைக் கண்டு குழந்தையாகிய மகன் மலர்ந்த கண்களுடன் ''அப்பா! அழாதே! அம்மா! அழாதே! அக்கா! அழாதே!'' என்று ஒவ்வொருவரிடமும் போய்ச் சொல்லி அவர்கள் மடியில் உட்கார்ந்தான். பிறகு அவன் எழுந்து அங்கிருந்த ஒரு விறகுக் குச்சியைக் கையில் எடுத்து ''அந்த ராக்ஷஸனை நான் இதனால் கொன்று போடுவேன்'' என்று மழலைச் சொல் சொல்ல எல்லோரும் சேர்ந்து பெருந் துக்கத்திற்கு இடையில் சிரித்தார்கள். இதுதான் நல்ல சமயம் என்று குந்திதேவி பேச ஆரம்பித்தாள்.

''இந்தத் துக்கத்திற்குக் காரணம் என்ன? தயவு செய்து சொன்னீர்களானால், ஏதாவது நிவர்த்திக்க முடியுமானால் நானும் செய்வேன்'' என்றாள்.

வியாசர் விருந்து:

பகாசுரன் வதம்

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்



பாண்டவர்கள் ஏக சக்ர நகரத்தில் பிராமண வேஷம் பூண்டு வசித்து வந்தார்கள். பிராமணர்களுடைய தெருவில் பிரமசாரிகளைப் போல் உபாதானம் எடுத்துக் கிடைத்ததைத் தாயார் குந்தியிடம் கொடுப்பார்கள். பிக்ஷைக்குப் போனவர்கள் வீட்டிற்குத் திரும்பிவரும் வரையில் குந்தி கவலையோடு காத்திருப்பாள். நேரத்தில் திரும்பி வராமல் போனால் என்ன நடந்ததோ என்று பயப்பட்டுக் கொண்டிருப்பாள்.

கிடைத்த அன்னத்தைக் குந்தி தேவி இரு சம பங்காகச் செய்து ஒரு பாதியை அவனுக்குப் பசி அதிகம் என்று பீமனுக்குக் கொடுத்து விடுவாள். மற்ற பாதியைத் தாயாரும் நான்கு சகோதரர்களும் சேர்ந்து ஐந்து பங்காகச் செய்து சாப்பிட்டு வந்தார்கள். பீமன் வாயு பகவானுடைய அம்சம் ஆனபடியால் அவனுக்குப் பலமும் அதிகம் பசியும் அதிகம். பீமனுக்கு விருகோதரன் என்றும் ஒரு பெயர். ஓநாய் வயிற்றைப் போல் சிறியதாகவும் எளிதில் திருப்திப் படாததுமான வயிற்றை உடையவன் என்று இதற்குப் பொருள். பீமசேனனுக்கு ஏக சக்கரபுரத்தில் அகப்பட்ட பிக்ஷான்னம் எவ்விதத்திலும் திருப்தியாக இருக்கவில்லை. நிறம்மாறி இளைத்துப் போனான். இதைக் கண்டு குந்தி தேவிக்கும் யுதிஷ்டிரனுக்கும் மிகுந்த துக்கம். சில நாள் கழித்து பீமன் ஒரு குயவனிடம் சிநேகம் செய்து அவனுக்கு வேண்டிய களிமண் வெட்டியெடுத்துக் கொண்டு வந்து கொடுத்தான். அவனும் இவனுக்காக ஒரு பெரிய மண்பாண்டம் செய்து கொடுத்தான். அதை எடுத்துக் கொண்டு பீமன் பிக்ஷைக்குப் போவான்.

ஒரு நாள் மற்ற சகோதரர்கள் பிக்ஷைக்குப் போயிருந்த காலத்தில் பீமசேனன் மட்டும் வீட்டில் குந்தியுடன் இருந்தான். அப்போது அவர்கள் குடியிருந்த பிராமணன் வீட்டில் ஏதோ துக்க சமாசாரம் நிகழ்ந்ததுபோல் உள்ளே அழும் குரல் குந்தி காதில்பட்டது. உடனே குந்தி என்னவென்று விசாரிக்க வீட்டிற்குள் சென்றாள். பிராமணனும் அவன் மனைவியும் அடிக்கடி அழுதுகொண்டு ஒருவரோடு ஒருவர் பேசிக்கொண்டிருந்தார்கள்.

* * *

“**து**ர்ப்பாக்கிய ஸ்திரீயே! நீ என் சொல்லைக் கேட்கவில்லை. நான் உன்னைப் பலமுறை வேண்டியும் இந்த ஊரை விட்டுப் போக நீ சம்மதிக்கவில்லை. இங்கு பிறந்தேன் இங்கு வளர்ந்தேன் இங்கேயே இருக்கலாம் என்று பிடிவாதம் செய்துவந்தாய். உன் தந்தையும் தாயும் பந்துக்களும் இறந்த பின்னும் இது பிறந்த ஊர் என்று இங்கேயே இருக்க ஆசைப்பட்டாய். எனக்குச் சகதர்மிணியாயும் தாயாகவும் சிநேகிதையாகவும் புத்திர சந்தானம் தந்த பாரியையும் எல்லாமாகிய உன்னை நான் எப்படி இழக்கச் சம்மதிப்பேன்? என் உயிரைக் காப்பாற்றிக் கொண்டு உன்னை யமனுக்கு அனுப்ப என்னால் முடியாது. இந்தச் சிறுமியை ஆண்டவன் நம்மிடம் வரப்போகும் அவள் கணவனுக்காக ஒப்புவித்திருக்கிறான். வம்ச விருத்திக்கென்று ஆண்டவன் கொடுத்த இவனைச் சாகவிடுவது அதருமம். மகனாகிய சிறுபிள்ளையைச் சாக அடிப்பதும் முடியாது. எனக்கும் உனக்கும் நம்முடைய முன்னோருக்கும்

கிருஷ்ண கான ஸபா (ரிஜிஸ்டர்ட்) திருச்சிராப்பள்ளி


4-6-44 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு

தேதாகுடி ஹையர் எலிமெண்டரி ஸ்கூல் கட்டிட நிதிக்காக

— திருச்சி நூற்றுக்கால மண்டபத்தில் —

ஸங்கீதக் கச்சேரி

சங்கீத பூஷணம் பாலக்காடு ஸ்ரீ C. S. கிருஷ்ணய்யர் — பாட்டு
மைசூர் ஸ்ரீ T. குருராஜப்பா — வயலின்
திருச்சி மாஸ்டர் சுந்தரம் — மிருதங்கம்
ஆலங்குடி ஸ்ரீ ராமசந்திரன் — கடம்
ஸ்ரீ T. R. ஹரிஹர சர்மா — மோர்சங்கு



குழந்தைகளுக்கு தளுதளுத்த மேனியும்

முகமலர்ச்சியோடு புஷ்டியையும் தருவதில் பெரீஸ் பிஸ்கட்ஸ் சிறந்த ஆகாரமென்று ஒவ்வொரு தாய்மார்களும் நம்புகிறார்கள்.

ஆம்

பெரீஸ்
பிஸ்கட்ஸ்

குழந்தைகளைப் போஷித்து வளர்க்கும் ஆகாரம்

சிற்றுண்டிகளுக்கு சிறந்ததோர் உணவு

புரட்சிக் கவிஞர்

பாரதிதாசன்

இயற்றிய

அழகின் சிரிப்பு

வெளி வந்து விட்டது!

விலை ரூ. 1-0-0

முல்லைப் பதிப்பகம்

59, பிராட்வே :: சென்னை



சேலத்தில்

கலியாண பட்டு ஜவுளி ரகங்கள்

வாங்க சிறந்த இடம்

ராம விலாஸ்

396, கடைவீதி, சேலம்.

Props :- S. N. RAMASWAMY CHETTY & BROS.

ஆகாச வெடி

"வாழ்க்கையின் தேவைக்கு இப்போது கொடுக்கும் சம்பளம் போதவில்லை யாகையால் தங்கள் சம்பளங்களை உயர்த்த வேண்டுமென்றும் தவறினால் உண்ணாவிரதம் இருப்போமென்றும் கக்கூர் ஆரம்பப் பாடசாலை உபாத்தியாயர்கள் முடிவு செய்திருக்கின்றனர்." —ஒருசெய்தி.

"உண்ணாவிரதமிருக்கப் போகிறவர்களுக்கு அதிகச் சம்பளம் கொடுத்துத்தான் என்ன பிரயோஜனம்" என்று சர்க்கார் தட்டிக் கழிக்கலாம்!

* * *

"பாரசீகத்தில் ஒரு ஜதை செருப்பு ரூபாய் 150க்கு மேல் விற்கிறது."

—ஒரு செய்தி.

யாராவது இவ்வளவு ரூபாயைப் போட்டுக் காலில் மிதிப்பார்களா?

* * *

"'சென்னை நகரில் உளுந்துப் பஞ்சம் ஏற்பட்டு விட்டதால் உளுந்து வடை முதலிய பட்சணங்கள் செய்யச் சிரமப்படும்" என்று ஹோட்டல்காரர்கள் கூறுகின்றனர்." —ஒரு செய்தி.

பரவாயில்லை; மைசூர் பாகில் மைசூரைப் போட்டா செய்கிறார்கள்! அந்த மாதிரி செய்து விட்டால் போகிறது.

* * *

"கோரக்பூருக்கு அருகில் ஒரு கிராமத்தில் பிள்ளை வீட்டுக்காரர்கள் வெல்லம் கேட்டார்களாம். பெண் வீட்டுக்காரர்கள் கொடுக்க மறுக்கவே சண்டை ஏற்பட்டு அடிதடியில் முடிந்தது." —லக்ஷ்மணபுரி செய்தி.

தித்திப்பு விஷயமாய் சம்பந்திகளுக்கிடையே மனக் கசப்பு ஏற்பட்டது பற்றி மிகவும் வருந்துகிறோம்.

* * *

"சிந்தாதிரிப்பேட்டை அரிசி ரேஷன் கடை ஒன்றில் புகுந்து ஒரு திருடன் இருந்த அரிசியை யெல்லாம் கொண்டு போய்விட்டான்." —ஒரு செய்தி.

அந்தத் திருடன் அவ்வளவு அரிசியையும் கொண்டு போகாமல் மற்றத் திருடர்களுக்கும் கொஞ்சம் ரேஷன் செய்து வைத்துவிட்டு போயிருக்கலாம்!



உங்களுடைய குழந்தைக்கு இவ்வளவுதானா செய்யமுடியும்?

இது போதாது. இன்னம் செய்ய வேண்டியது அநேகம் உள்ளன. உங்கள் வீட்டில் குழந்தைகள் உங்கள் அன்பிற்குகந்த மற்றுமுள்ளவர்கள் யாவருமே எப்போதும் சந்தோஷமாக இருக்குமாறு செய்யவேண்டும். உங்கள் பையனின் படிப்பு, பெண்ணின் கல்யாணம், இவைகளுக்கு எல்லாம் மேலாக உங்கள் மனநிம்மதிக்கும் ஏற்பாடு செய்து கொள்ளவேண்டும். அதை இப்போதே செய்யுங்கள். இதற்காக "நேஷனல்" உங்களுக்குச் சேவை செய்ய எப்போதும் காத்திருக்கிறது.

நேஷனல்

இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

நெருப்பு, விபத்து, மோட்டார், மற்றும் சகலவிதமான இன்ஷ்யூரன்ஸுக்கும்

நேஷனல் பயர் அண்டு

ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

7, கௌன்ஸில் ஹௌஸ் தெரு, கல்கத்தா

மதராஸ் பிராஞ்சு:

"நேஷனல் இன்ஷ்யூரன்ஸ் பில்டிங்"

362, சைனா பஜார் ரோடு, எஸ்பிளனேட்

சப் ஆபீஸ்கள்:

பெங்களூர் :: மதுரை.

"இந்தியாவின் அரசியல் முட்டுக் கட்டையை நீக்குவதற்கு பிரிட்டிஷ் சர்க்கார் விரும்புகிறார்களா, இல்லையா?" என்று ஸி. ஆர். ரெட்டி கேட்கிறார்; கேட்டுக் கொண்டே இருக்கிறார்.

இன்னும் அநேகர் ஓயாமல் கேட்டுக் கொண்டே இருக்கிறார்கள்.

"காங்கிரஸ் தலைவர்களை விடுதலை செய்யாவிட்டால், முட்டுக் கட்டையை நிவர்த்திக்க பிரிட்டிஷ் சர்க்கார் விரும்பவில்லை யென்று ஏற்பட்டு விடும்!" என்று இரண்டு வருஷமாகப் பயமுறுத்திக் கொண்டே இருக்கிறோம்.

பிரிட்டிஷ் சர்க்காருக்கு இந்திய முட்டுக் கட்டையை நீக்க விருப்பமுமில்லை, அக்கரையுமில்லை என்பது இதற்குள் ஸ்பஷ்டமாக வில்லையென்றால், அது பிரிட்டிஷ் சர்க்காரின் தவறு இல்லவே இல்லை. அவர்கள் அதை ஸ்பஷ்டமாக்கித்தான் இருக்கிறார்கள். ஆனால் நம்மில் சிலருக்குத்தான் இன்னும் ஆசை விடவில்லை.

"சமாதான மகாநாட்டுக்கு இந்தியப் பிரதிநிதிகளாக மகாத்மாவையும் ஜவாஹர்லாலையும் அனுப்பாமல் மட்டும் இருக்கட்டும்; அப்போது பிரிட்டிஷ் சூட்டு வெளியாகிறதா, இல்லையா, பார்க்கலாம்!" என்று மகாகனம் சாஸ்திரியார் சென்ற சில காலமாகப் பயமுறுத்திக் கொண்டே இருக்கிறார். சென்ற வாரத்தில் கூட அப்படி ஒரு 'சவால்' விடுத்திருக்கிறார்.

இது வரையில் உடையாத பிரிட்டிஷ் சூட்டு, இனிமேலா உடையப் போகிறது? உண்மையில் இன்னும் ஏதாவது பாக்கி யிருக்கிறதா? இருந்தால் அது நமது ஆசை உள்ளத்திலேதான் இருக்கிறது; வெளி உலகத்தில் இல்லை.

பிரிட்டிஷ் 'சூட்டு' எல்லாம் சுக்கு நூறாக உடைந்து நொறுங்கிப் போய் விட்டது. அதைப் பற்றிப் பிரிட்டிஷார் கொஞ்சமும் கவலைப் படுவதாகத் தெரியவில்லை.

சர்ச்சில் இப்போதெல்லாம் சற்றும் ஒளிவு மறைவாகக்கூடப் பேசுகிறதில்லை. "உலகப் புனருத்தாரணம்", "சர்வ உலக ஜனநாயகம்" என்னும் விஷயங்களைப் பற்றி யெல்லாம் அவர் பட்டவர்த்தனமாகக் கேலி செய்கிறார்.

இன்னமும் நாம் பிரிட்டிஷாரிடமிருந்து இந்தியாவின் சுதந்திரத்தையோ ஜனநாயக ஆட்சியையோ எதிர்பார்த்துக் கொண்டிருந்தோமானால் அது நம்முடைய மூளைக் கோளாறேயன்றி, சர்ச்சிலின் தவறாகாது.

* * *

இந்தியா சுதந்திரம் அடைவதற்கான வழிகளை நாம் ஆலோசிக்கும்போது பின்வரும் உண்மைகளை அழுத்தமாக மனதில் வைத்துக்கொண்டு யோசிக்க வேண்டும்:—

1\. பிரிட்டிஷ் அதிகாரப் பதவிகளில் சர்ச்சில் கூட்டத்தார் அசைக்கமுடியாத பலத்துடன் உட்கார்ந்திருக்கிறார்கள்.

2\. யுத்தம் முடியும் வரைக்கும் அவர்கள்தான் இருப்பார்கள்; யுத்தம் முடிந்த பிறகும் அவர்கள்தான் இருப்பார்கள்.

3\. பிரிட்டிஷ் வெற்றியுடன் யுத்தம் முடியும்போது, சர்ச்சில் கூட்டத்தின் அதிகாரம் பத்து மடங்காகப் பெருகியிருக்கும்.

4\. வெற்றிக் கர்வங் கொண்ட சர்ச்சில் கூட்டம் இந்தியாவுக்கு மனதார ஒரு நாளும் சுதந்திரம் கொடுக்கப் போவதில்லை. வேறு கூட்டம் வந்தாலும் இந்தியா விஷயத்தில் பிரிட்டிஷ் கொள்கை மாறப்போவதில்லை.

5\. இங்கிலாந்திலுள்ள இந்திய அனுதாபிகளின் பேச்செல்லாம் இந்தியாவுக்கு ஒருவித அனுகூலமும் செய்யாது. இந்தியாவையும் உலகத்தையும் ஏமாற்றுவதற்குத்தான் உபயோகமாகும்.

மேற்கூறிய அப்பட்டமான உண்மைகளை யெல்லாம் மனதில் வைத்துக் கொண்டு, சுயராஜ்யம் அடையும் வழியை நாம் தேட வேண்டும். அதற்குத் தகுந்தவாறு தீர்க்காலோசனையுடன் நமது வேலைத் திட்டத்தை அமைக்க வேண்டும்.

இல்லாவிடில் மீண்டும் மீண்டும் ஆசாபங்கமும் ஏமாற்றமுந்தான் அடைய வேண்டியதாயிருக்கும்.

ஐந்து ரூபாய் பரிசு: சென்ற இதழில் வெளியான "பெரிய சோம்பேறி!" என்னும் துணுக்குக்கும் பரிசு பெற்றவர்: ஏ. கே. பட்டுசாமி, 13, சர்தார் படேல் தெரு, மாம்பலம்.

பிறருடைய முயற்சியினாலோ, சுதந்திரம் வந்து விடும் என்ற நினைவு இருக்கும் வரையில், சுயராஜ்யத்துக்காக நாம் பூரணப் பிரயத்தனம் செய்வது எவ்வாறு சாத்தியமாகும்?

இந்தியாவின் சுதந்திரத்துக்கு இங்கிலாந்திலுள்ள நண்பர்களை நம்பியிருப்பது போன்ற மூடத்தனம் — பைத்தியக்காரத்தனம் — வேறில்லை யென்பதற்குச் சரித்திரமே சாட்சி கூறுகின்றது.

கிளைவ் — வாரன் ஹேஸ்டிங்ஸ் காலம் முதற்கொண்டு இங்கிலாந்தில் இந்தியாவுக்கு நண்பர்கள் இருந்து வருகிறார்கள். வாரன் ஹேஸ்டிங்ஸின் அக்கிரமங்களைப் பற்றி எட்மண்ட் பர்க் என்பவரின் பிரசங்கங்கள் பிரசித்தி பெற்ற இலக்கியமாக இன்றும் விளங்குகின்றன! ஆனால் இலக்கியமாக விளங்குவதோடு அவற்றின் உபயோகம் தீர்ந்தது. ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவும் என்று எதிர்பார்த்தால், அது எதிர்பார்ப்பவர்களின் தவறே யல்லாமல், ஏட்டுச் சுரைக்காயின் தவறு?

எட்மண்ட் பர்க்குக்குப் பிறகும் இங்கிலாந்தில் இந்தியாவின் நண்பர்கள், சுதந்திர தேவியின் பக்தர்கள், ஜனநாயக வீரர்கள் எவ்வளவோ பேர் இருந்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் அரசாங்க அதிகார பதவிகளுக்கு வருவதில்லை. அப்படி வந்தாலும் அவர்களுடைய கொள்கை உடனே மாறிப் போய் விடும்! இதற்குப் பிரசித்தி பெற்ற உதாரணம், மிஸ்டர் ராம்ஸே மக்டனல்டு. ''இந்தியாவுக்குச் சுதந்திரம் கொடுக்க மறுப்பதைப் போல் இங்கிலாந்து செய்து வரும் பாதகம் வேறில்லை'' என்று புத்தகத்தில் எழுதிய இந்த மன்னவன், தான் பிரதம மந்திரியானதும் இந்தியாவுக்கு என்னத்தைக் கொடுத்தார் என்பதை நாம் அறிவோம்.

கொள்கை மாறுவதற்குச் சமீப காலத்து உதாரணம், பார்லிமெண்டு அங்கத்தினர் மிஸ்டர் ஷின்வெல் என்பவர்.

இந்த ஷின்வெல் என்பவர் கொஞ்ச காலத்திற்கு முன்பு வரையில் சர்ச்சிலை வெளு, வெளு என்று வெளுத்துக் கொண்டிருந்தவர். இந்தியாவின் சுதந்திரத்தை ஆதரித்து எவ்வளவோ தொண்டை கிழியப் பேசியவர்.

அவருடைய வாக்கு வன்மை முதலியவற்றைப் பார்த்து விட்டு, ''சர்ச்சிலுக்குப் பிறகு இவர்தான் பிரதம மந்திரி!'' என்று சிலர் சொல்ல ஆரம்பித்தார்கள்.

உடனேயே அவருடைய தலை திரும்பி விட்டது.

சில நாளைக்கு முன்பு நடந்த ஒரு விவாதத்தில், மிஸ்டர் ஷின்வெல் ''இந்தியாவுக்குப் பூரண சுதந்திரம் கொடுப்பதென்பது நடக்காத காரியம்'' என்று சர்ச்சிலின் சிந்தை குளிரும்படி பேசினார். அது முதல் சர்ச்சிலும் அவரைப் பாராட்டியே பேசி வருகிறார்.

ஆகவே இங்கிலாந்திலுள்ள இந்திய அனுதாபிகளின் பேச்சுக்கள், காரியங்கள் எல்லாம் எதற்கு உபயோகமாகி வருகின்றன?

இந்தியாவுக்கு உபயோகமாகவில்லை.

இந்திய சுதந்திரத்திற்கும் உபயோகமாகவில்லை.

பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை இன்னும் பலப்படுத்துவதற்குத்தான் அன்று முதல் இன்றுவரை பயன்பட்டு வருகின்றன.

இங்கிலீஷ்காரர்களின் நியாய புத்தியையும், நேர்மையையும் பற்றி உலகில் அசை நம்பிக்கையை உண்டாக்குகின்றன.

அடிமைத் தேசங்களுக்கு அவர்களே சுயராஜ்யம் கொடுத்து விடுவார்களென்ற ஆசையை ஊட்டி வளர்க்கின்றன.

ஆகவே சர்ச்சிலை எதிர்த்தும், இந்தியாவை ஆதரித்தும் பேசுகிற இங்கிலீஷ்காரர்களும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்கே சேவை செய்கிறார்கள்!

அதுவும் ஒரு சாம்ராஜ்ய தந்திரமாகவே முடிகின்றது!

* * *

உண்மை மேற்கண்டவாறு இருக்கும்போது, இந்தியாவின் சுதந்திரத்துக்கு நாம் மேற்குத் திக்கை ஆவலுடன் நோக்கிக் கொண்டிருப்பதில் என்ன பயன்?

இதைக் காட்டிலும் அப்பட்டமான இன்னும் சில உண்மைகளும் நமது பிரசித்தி பெற்ற அரசியல் பிரமுகர்கள் சிலருக்குத் தெளிவாகவில்லையென்பது ஆச்சரியமான விஷயமாகும்.

இந்தச் சம்பவத்திலிருந்து அநேகமாகக் கர்னல் அமெரி இந்தியா மந்திரி பதவியிலிருந்து நீக்கப் படக்கூடும் என்ற வதந்தி கிளம்பி, இதுவரைக்கும் நாலைந்து பேருக்குள் பிரமாதமாகப் பரவி யிருக்கிறது.

மாஸ்கோ, மே 7.

இந்த நகரில் வெளியாகி வரும் பிரசித்தி பெற்ற "தினசரிப் புளுகன்" என்ற பத்திரிகையில் இந்தியாவின் பஞ்சத்தைப் பற்றி ஒரு கடுமையான கட்டுரை வெளியாகி யிருக்கிறது. வங்காளப் பஞ்சத்தினால் நேர்ந்த மரணங்களுக் கெல்லாம் யார் பொறுப்பாளி என்று அப்பத்திரிகை கடுமையாகக் கேட்டிருப்பதுடன், பஞ்சத்தின் உண்மைக் காரணம் இன்னதென்று அதனுடைய கல்கத்தா நிருபர் குட்டை உடைத் திருப்பதையும் பிரசுரித்திருக்கிறது. வங்காளப் பஞ்சத்துக்குக் காரணம் பர்மாவை ஜப்பானியர் பிடித்ததுதான் என்றும், ஆகையால் பர்மாவைத் திரும்ப உடனே கைப்பற்றியாக வேண்டும் என்றும் அந்தப் பத்திரிகை விளாசியிருப்பதுடன் அதற்கு வேண்டிய உற்சாகத்தை இந்தியர்கள் பெறும் பொருட்டு, 2244-ம் ஆண்டில் இந்தியாவுக்குச் சுயராஜ்யம் கொடுத்து விடுவதாக உடனே அறிவிக்கப்பட வேண்டுமென்றும் வற்புறுத்தி யிருக்கிறது.

மேற்படி கட்டுரையை இங்குள்ள இந்தியாவின் அனுதாபிகள் பெரிதும் வரவேற்கின்றனர்.

லண்டன், மே 16.

காமன்ஸ் சபையில் இன்றைய தினம் இந்தியாவைப் பற்றிச் சரமாரியாகக் கேள்வி கேட்கப்பட்டது.

"இந்தியக் காங்கிரஸ் வாதிகளை ஏன் இன்னமும் சிறையில் சாப்பாடு போட்டு வைத்திருக்க வேண்டும்? அந்தச் சாப்பாட்டையெல்லாம் அஸ்ஸாம் எல்லையில் ஜப்பானியருடன் வீரப் போர் புரியும் சிப்பாய்களுக்குப் போட்டாலும் பிரயோசனம் உண்டல்லவா?" என்று மிஸ்டர் இடியட் எம். பி. கேட்டார்.

"இல்லை" என்று அமெரி பதில் சொன்னார்.

"காங்கிரஸ் வாதிகளுக்குப் போடுகிற சாப்பாட்டைச் சிப்பாய்களுக்குப் போட்டால் அவர்கள் அஹிம்சா வாதிகள் ஆகிவிட மாட்டார்களா?" என்று மிஸ்டர் நான்ஸென்ஸ் எம். பி. கேட்டார்.

"தகவல் இல்லை" என்று அமெரி சொன்னார்.

அமெரியின் மேற்படி பதிலைக் குறித்து அதிருப்தி யடைந்த சில பார்லிமெண்ட் அங்கத்தினர்கள், இந்தியா மந்திரியை அவருடைய ஆபீஸ் அறையில் பேட்டி காணுவார்கள் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

இதன் பலனாக, பிரிட்டிஷ் சர்க்காரின் இந்தியக் கொள்கையில் ஏதேனும் மாறுதல் ஏற்படலாமென்றும் நம்பப் படுகிறது.

* * *

மேற்கூறியவை போன்ற மகத்தான செய்திகள் — தம்பிடிக்குப் பயனில்லாத செய்திகள் அடிக்கடி நமது தினசரிப் பத்திரிகைகளில் வந்த வண்ணமா யிருக்கின்றன. அவை ராய்ட்டர் செய்தி ஸ்தாபனத்தாலும் அனுப்பப்படுகின்றன; சொந்த நிருபர்களும் வேறு அனுப்பி வைக்கிறார்கள்.

"தம்பிடிக்குப் பயனில்லை" என்று சொன்னோம்? தவறு! அவற்றினால் பயன் இருக்கத்தான் இருக்கிறது. இந்தியாவுக்கு யாதொரு பயனுமில்லை ஆனால் பிரிட்டனுக்கும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்கும் யதேஷ்டமான பயன் இருக்கிறது.

"இங்கிலாந்து ஜனங்கள் எல்லோரும் சர்ச்சிலையும் அமெரியையும் போன்றவர்கள் அல்ல; அவர்களிலும் நல்லவர்கள் இருக்கிறார்கள். இந்தியாவின் சிநேகிதர்கள் இருக்கிறார்கள். அவர்கள் இந்தியாவின் கட்சியை எடுத்துச் சொல்வார்கள். இந்தியாவுக்காகச் சண்டை போடுவார்கள். அடுத்தபடியாக அவர்களே அதிகாரத்துக்கு வந்தாலும் வருவார்கள். அவர்கள் அதிகாரத்துக்கு வந்ததும் இந்தியாவுக்குச் சுதந்திரம் கொடுத்து விடுவார்கள்!" என்று இம்மாதிரியான வீண் ஆசைகளையெல்லாம் இந்திய மக்களின் உள்ளத்தில் கிளப்புவதற்கு மேற்படி செய்திகள் பயன்படுகின்றன. "சுயராஜ்யம் ஒரு நாள் சீமையிலிருந்து ஆகாசத் தபால் பார்ஸலில் வந்து விடும்" என்ற பொய் நம்பிக்கையை வளர்ப்பதற்கு அவை உபயோகமாகின்றன. பிறர் கொடுத்தோ,

அதுவும் ஒரு தந்திரம்!

இந்தியா சுயராஜ்யம் அடைவதற்குச் சுலபமான வழி என்ன தெரியுமா?

தெரியாவிட்டால் நாம் சொல்கிறோம், கேளுங்கள்:

தினந்தோறும் தபால்காரனுடைய வரவை எதிர்பார்த்துக் கொண்டு சிவனே என்று பேசாமல் இருக்க வேண்டியது.

ஒரு நாளைக்குத் திடீரென்று தபால்காரன் ஒரு பார்ஸலை எடுத்துக்கொண்டு வருவான்.

அந்தப் பார்ஸல் இங்கிலாந்திலிருந்து அனுப்பப்பட்டிருக்கும்.

பார்ஸலின் மேலே, "மகாகனம் பொருந்திய ஸ்ரீமான் இந்தியருக்கு" என்று எழுதப்பட்டிருக்கும்.

பார்ஸலை வாங்கி உடைத்துப் பார்த்தால், அதற்குள்ளே கொழுக்கட்டை மாதிரி சுயராஜ்யம் உட்கார்ந்து கொண்டு, கொட்டுக் கொட்டு என்று விழித்துக் கொண்டிருக்கும்!

சுயராஜ்ய மடைவதற்கு இந்தச் சுலபமான வழியைப் பற்றி உங்களுக்கு என்ன தோன்றுகிறது?

"இது என்ன பைத்தியக்காரத்தனம்! சுயராஜ்யமாவது, பார்ஸலில் வரவாவது!" என்று தோன்றுகிறதல்லவா?

ரொம்ப சரி; அப்படியானால் இங்கிலாந்திலுள்ள இந்திய அனுதாபிகளின் காரியங்களைப் பற்றி எதற்காக நமது தினசரிப் பத்திரிகைகளில் பத்தி, பத்தியாகச் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன?

இந்தியாவிலுள்ள ஸ்ரீ நடுவீதி நாராயணன், ஸ்ரீமான் அதிக்கை ராயர், திருவாளர் வழிப்போக்கர் ஆகியவர்களுடைய அபிப்பிராயங்களுக்கு நாம் கொடுக்கும் மதிப்பைக் காட்டிலும் பன்மடங்கு மதிப்பு இங்கிலாந்திலுள்ள மிஸ்டர் கூஸ், மிஸ்டர் இடியட், மிஸ்டர் எக்ஸெண்ட்ரிக் முதலியவர்களுடைய அபிப்பிராயங்களுக்கு ஏன் கொடுக்கிறோம்? பத்திரிகைகளில் பெரிய கொட்டை எழுத்துத் தலைப்புகளின் கீழ் அவற்றை ஏன் பிரசுரிக்கிறோம்?

மேற்கூறிய விதமான செய்திகளுக்குச் சில உதாரணங்கள் பார்க்கலாம்:—

லண்டன், மார்ச் 17.


இன்றைக்கு இங்கே நடைபெற்ற சலவைத் தொழிலாளரின் மாபெருங் கூட்டத்தில் இந்தியாவின் விடுதலைப் பிரச்னையைப் பற்றி வெளுத்து வெளுத்து வாங்கப்பட்டது. பார்லிமெண்ட் அங்கத்தினர் மிஸ்டர் டோபி இந்தியாவுக்குச் சுதந்திரம் அளித்த பிறகுதான் பிரிட்டிஷ் தொழிலாளிகள் வெள்ளையாக உடை உடுத்த முடியும் என்று வற்புறுத்திக் கூறினார். அவருக்கு அடுத்த படியாகப் பேசிய இந்திய சுயராஜ்யக் காரியதரிசி டாக்டர் லம்பாடி பிஷ்ணு மேனன், "ஒன்று இந்தியாவுக்கு விடுதலையளிக்க வேண்டும்; அல்லது விடுதலைக்கு இந்தியாவை அளிக்க வேண்டும். இல்லாத வரையில் உலகம் உருப்பட்டு நாசமாகப் போவதில்லை" என்றார். உற்சாகமான கரகோஷத்திற்கிடையில் மூன்றே அரைக்கால் பேர் இந்தியாவின் விடுதலைக்குச் சாதகமாக வோட்டுக் கொடுத்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.


லிவர்பூல், ஏப்ரல் 1.


இன்று லிவர்பூலில் சாம்ராஜ்ய சர்வ முட்டாள் தினக் கொண்டாட்டம் நடைபெற்றபோது, இந்தியா மந்திரி அமெரியைத் திண்டாடச் செய்து விட்டார்கள். பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் பெயர் பெற்ற முட்டாள்களைப் பற்றிக் கர்னல் அமெரி விஸ்தாரமாகப் பேசி வருகையில், "லார்ட் லின்லித்கோவின் காளை மாடு சௌக்கியமா?" என்று ஒருவர் கேட்டு விட்டார். அமெரி இதற்குப் பதில் சொல்ல முடியாமல் கொட்டுக் கூடை முழி முழித்தார். கூட்டம் முடிந்ததும் ஓட்டம் பிடித்தார். லண்டனுக்குப் போய்த்தான் திரும்பிப் பார்த்தார் என்று தெரிகிறது.

நிகழ்ச்சிச் சித்திரம்

-உம்மன்









-உம்மன்


"உலகம் புது சகாப்தத்தை அடைய அட்லாண்டிக் சாஸனம் தான் வழிகாட்டி மரம்"
-சர்ச்சில் பிரசங்கம்
புது சகாப்தத்துக்கு வழி இதோ!
உலகம்


"இனி யுத்தம் நேராமல் தடுப்பதற்கு, இந்த யுத்தத்தில் ஜயிக்கும் மாபெரும் தேசங்கள் ஒன்றுசேர்ந்து ஒரு உலக கவுன்ஸிலை ஏற்படுத்த வேண்டும்."—சர்ச்சில்

நிகழ்ச்சிச் சித்திரம்



கல்கி

மலர் 3 | தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார் | இதழ் 34

என்ன சேதி?

அதிகாரம் நடக்கிறது!

சென்னை மாகாணத்தில் பிரிட்டிஷ் அதிகாரந்தான் நடக்கிறது,—அதிலும் வடிகட்டிய யதேச்சாதிகாரம் நடக்கிறது, — என்பதைச் சென்னைப் போலீஸ் கமிஷனர் சமீபத்தில் நமக்கு நினைவூட்டியிருக்கிறார். தமிழ் நாடு, ஆந்திர தேசம், மலையாள ராஜ்யம் ஆகிய மூன்று மாகாணங்களிலும் சிறைக்கு வெளியேயுள்ள காங்கிரஸ் வாதிகளின் கூட்டம் ஒன்றைச் சென்னையிலே கூட்டலாம் என்று காங்கிரஸ் பிரமுகர்கள் சிலர்,—ஸ்ரீமதி ருக்மிணி லக்ஷ்மிபதி, ஸ்ரீ ஸி. என். முத்துரங்க முதலியார், ஸ்ரீ கோட்டி ரெட்டி முதலியவர்கள் — யோசனை செய்திருந்தார்கள். இந்தக் கூட்டத்தை நடத்த அநுமதி தரவேண்டுமென்று போலீஸ் கமிஷனருக்கு விண்ணப்பித்துக் கொண்டார்கள். "அநுமதி தர முடியாது" என்று கமிஷனரின் பதில் பளிச்சென்று வந்துவிட்டது! இதிலிருந்து, சென்னை மாகாணத்தில் பிரஜா உரிமைகள் எவ்வளவு தூரம் நிலவுகின்றன என்பது நமக்கும் பளிச் சென்று தெரிகிறது.

வெற்றிகரமான வாபஸ்

கஸ்தூரிபாய் நிதி சம்பந்தமாக நாம் எழுதிய கட்டுரையில், தமிழ்நாட்டிலுள்ள பெரும் பணக்காரர்களும் முதலாளிகளும் மேற்படி நிதிக்குப் பணம் கொடுக்க மாட்டார்கள் என்று எழுதியிருந்தோம். அதை இப்போது வாபஸ் வாங்கிக் கொள்வதுடன், இது வெற்றிகரமான வாபஸ் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம். கோயமுத்தூரிலுள்ள மில் முதலாளிகள் சிலர் மேற்படி வெற்றிகர வாபஸுக்குக் காரணமாயிருக்கிறார்கள். ராஜாஜியும் தக்கர் பாபாவும் சமீபத்தில் கோயமுத்தூர் சென்றிருந்தபோது ஸர் ஆர். கே. ஷண்முகம் செட்டியாரும், ஸ்ரீ ராமலிங்கச் செட்டியாரும் தலைக்கு இரண்டாயிரம் ரூபாய் மேற்படி நிதிக்குக் கொடுத்தார்களாம். இன்னும் மில் முதலாளிகள் மூவர் தலைக்கு இருபதினாயிரம் ரூபாய் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்களாம். இதிலிருந்து தமிழ்நாட்டுப் பணக்காரர்களிலும் கொடுத்து வைத்த பாக்கியசாலிகள் சிலர் இருக்கிறார்கள் என்று ஏற்படுகிறது. மிகவும் சந்தோஷம்.

மருந்து கிடையாது

"இந்தியாவிலுள்ள ஆஸ்பத்திரிகளுக்குச் சரிவர மருந்துகள் சப்ளை செய்யப்பட்டு வருகின்றனவா?" என்று ஒரு பார்லிமெண்ட் மெம்பர் கேட்ட கேள்விக்கு அமெரி "இந்தியாவில் மருந்துகளுக்கா பஞ்சம்? இந்திய ஆஸ்பத்திரிகளில் ஏராளமான மருந்துகள் இருக்கின்றன" என்று பதில் சொன்னார். "இது சுத்தப் பொய். நமது ஆஸ்பத்திரிகளில் வெறும் விளக்கெண்ணெயும் சுத்த ஜலமும்தான் இருக்கின்றன. வேறு ஒரு மருந்தும் இல்லை. இது டாக்டர்களுக்கும் நோயாளிகளுக்கும் பகிரங்கமாகத் தெரிந்த விஷயந்தான்" என்று அகில இந்திய மருந்து வியாபாரிகள் சங்கத்தைச் சேர்ந்த ஒருவர் சமீபத்தில் கூறியிருக்கிறார். அமெரியின் விளக்கெண்ணெய்க் கொள்கை ஆஸ்பத்திரி விஷயத்தில்கூட எட்டிவிட்டதைக் குறித்து நாம் ஆச்சரியப்படவில்லை. ஆனால், அந்த விளக்கெண்ணெய்க்குக்கூட ஆபத்து வந்து விடாமலிருக்க வேண்டுமே என்றுதான் கவலைப்படுகிறோம். ஆஸ்பத்திரியின் நல்ல பெயரைக் காப்பாற்ற விளக்கெண்ணெய் ஒன்றே போதும் என்று கூடக் கருதுகிறோம். ஏனெனில் அதுவும் இல்லாவிட்டால், ஆஸ்பத்திரி என்ற பெயர் போய்த் தண்ணீர்ப் பந்தல் என்ற பெயர் வந்து சேருமல்லவா?



90 பவுண்டு அல்லது 60 பார் கொண்ட கேஸ் ஒன்று விலை ரூ. 35/-
எந்த ரயில்வே ஸ்டேஷனிலும் இலவச டெலிவரி செய்யப்படும்.

மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல் கார்ப்பொரேஷன் தயாரிப்பு

மானேஜிங் ஏஜெண்டுகள் : சேஷசாயி பிரதர்ஸ் லிமிடெட், திருச்சினாப்பள்ளி

கீழ்க்கண்ட பூரண விற்பனையாளர்களிடமிருந்தோ அல்லது அடியிற்கண்டவர்களின்னுள்ள அவர்களது வினியோகஸ்தர்களிடமிருந்தோ சரக்குகள் கிடைக்கும்.

தி அலைட் இண்டஸ்ட்ரியல் டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் லிமிடெட்.,

120, அரமனைக்காரத் தெரு, ஜி. டி. சென்னை. திருச்சினாப்பள்ளி, மேட்டூர் அணை.
பெங்களூர், பெஜவாடா, கள்ளிக்கோட்டை, கோயமுத்தூர், கடப்பை,
குண்டூர், மதுரை, பாலக்காடு, தஞ்சாவூர், திருநெல்வேலி, திருச்சூர்,
திருவனந்தபுரம், விசாகப்பட்டணம், ஹைதராபாத் (டெக்கான்.)

கல்கி

பொருளடக்கம்

மலர் 3 } இதழ் 34 }


1944 ஜூன் 4

{ தாரண ௵ { வைகாசி 22

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.



உபாத்தியாயர் ஒருவர் தமது மாணாக்கர்களிடம் நல்ல பெயர் வாங்குவது மிகவும் கடினம். மாணாக்கர்களின் பெற்றோர்களிடம் நல்ல பெயர் எடுப்பது அதை விடக் கடினம். இதை யெல்லாம் விடச் சிரம சாத்தியமான காரியம் என்ன வென்றால், முனிசிபாலிடியினால் நிர்வகிக்கப்படும் ஒரு பள்ளிக்கூடத்தின் உபாத்தியாயர், முனிசிபல் கௌன்சிலர்களிடம் நல்ல பெயர் சம்பாதிப்பதே யாகும். இப்படிப்பட்ட அசாத்தியமான காரியங்களை எல்லாம் சாதித்தவரான ஸ்ரீ வி. ராகவய்யங்காரின் உருவப் படத்தை இந்த இதழ் "கல்கி" அட்டையில் குதூகலத்துடன் வெளியிட்டிருக்கிறோம். சென்ற இருபத்தைந்து ஆண்டுகளாக மாயவரம் ஹைஸ்கூலின் ஹெட் மாஸ்டர் பதவியைச் சிறப்பாக வகித்து, எல்லாரிடமும் 'நல்லவர்' என்ற பெயரை வாங்கிக் கொண்டு, ஸ்ரீ ராகவய்யங்கார் இந்த ஜூன் மாதத்தில் விலகிக் கொள்கிறார். அவருடைய அரிய சேவையைப் பாராட்டுவதற்காக நடத்தப்படும் கொண்டாட்டத்தில் மாயவரத்தின் பிரமுகர்கள் அனைவரும் ஒன்றுபட்டிருக்கிறார்கள் என்பது பெரிதும் உவகை தரும் விஷயமாகும்.





வினோலியா உபயோகித்து ஸ்நானம் செய்தால் குளிர்ச்சி உண்டாகும் போது நீங்கள் ஏன் வெப்பத்தினால் கஷ்டப்பட வேண்டும். இந்த சோப்பின் வெண்ணிரம் வாய்ந்த நுரை உங்களை சுத்தமாக்கும் பொழுது ஏன் வியர்வையுடன் இருக்கவேண்டும். வினோலியா சோப்பின் வாசனை சுறுசுறுப்பையும், உத்ஸாகத்தையும் உண்டுபண்ணி, மனதிற்கு சுகத்தையும் அளிக்கிறது.

வினோலியா ஒயிட் ரோஸ் சோப்பு



VWR. 17-60 TM   VINOLIA CO. LIMITED, LONDON, ENGLAND



மகத்தான **5** வது வாரம்

T. K. S. சகோதரர்களின்
நாடகம்!

★

காரைக்குடி
ஷண்முக விலாஸில்

“சிவ லீலா”

(உரிமை பெற்றது)

★

3-6-44 முதல் 10-6-44 வரை
தினமும் இரவு 10-30-க்கு

M. S. B. S. சபையார்



மகத்தான இரண்டாவது வாரம்!

சென்னை

கெயிட்டி டாக்கீஸில்

★

அமோகமான 8 வது
வாரமாக தமிழ்
நாடெங்கும் ஓடிக்
கொண்டிருக்கிறது



கலைவாணி பிலிம்ஸ் ப M.U.A.C. தயாரித்த

பர்த்ருஹரி

சாமா - ஜெயம்மா
கிருஷ்ணன் - மதுரம்
காளி N. ரத்னம் - ராஜகாந்தம்

நடிப்பது

★

டைரக்ஷன் :

K. சுப்பிரமணியம் & C. S. V. அய்யர்

சென்னை ஒரௌனிலும் கூடிய சீக்கிரம்
ஆரம்ப தேதியை எதிர்பாருங்கள்

விநியோகஸ்தர்கள் :

ஸௌத் இந்தியா பிக்சர்ஸ் லிமிடெட்

காரைக்குடி

பிராஞ்சுகள் : மதுரை, கோயமுத்தூர், பெங்களூர், பெஜவாடா

எல்லோராலும் எவ்வகையிலும்
மேன்மையானதெனப் போற்றப்படும்

தமிழ் ஹரிச்சந்திரா

ப்ரகதி
தயாரிப்பு

★

இப்பொழுது தூத்துக்குடி
கும்பகோணம் இன்னும் பல
இடங்களிலும் வெற்றிகரமாக
- நடைபெறுகிறது -

★

டிஸ்டிரிபியூடர்கள் :

FAMOUS TALKIE DISTRIBUTORS

MADRAS — MADURA — BANGALORE — BEZWADA — HUBLI